# சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 2-ம் இலக்கம்


## சோதிட சாஸ்திரிகளின் கல்லறை

மிலான்நகரிலே புனிதமான ஓர் கல்லறை இருந்துவருகிறது. இது மிலான்நகர்வாசிகள் மற்றும் கிறிஸ்மஸ்பண்டிகைகால திருநாட்களைக்காட்டிலும் கர்த்தரின் பிரத்தியட்சத் திருநாளை—அதாவது மூவரசர்கள் திருநாளை அத்துணைபெரும்ஆடம்பரமாக ஏன் கொண்டாடுகிறார்கள் என்பதை இனிதேவிளக்குகின்றது. வேறெதற்குமாகவல்ல, ஆனல், இந்தக்கல்லறை சோதிடசாஸ்திரிகள் மூவரினதும்— அதாவது மூவிராசாக்களின் திருஎன்புகளைக் கொண்டிருப்பதாலேயே மிலான்நகர்வாசிகள் அவர்களின் திருநாளை அத்துணைபெருஞ்சிறப்பாய்க் கொண்டாடுகிறார்கள். ஆயினும் மிலான்நகரம் 800வருட போராட்டத்தின்பின்னரே இந்த என்புகளை மீளப்பெற்றுக்கொண்டது.

அந்நகரிலே சரித்திரபூர்வமான ஞாபகார்த்த சின்னங்களாலும், கலைப் பொக்ஷங்களாலும் நிறைந்து வளம்பெற்றுத்திகழும் அர்ச். யூஸ்ரோர்ஜியஸின் மகா தேவாலயமே விலைமதித்தற்கரிய திரவியங்கள்போலும் இந்தஅருமையானதிருஎன்புகள் இருந்துவரும் கல்லறையைக் கொண்டு விளங்குகின்றது.

சோதிடசாஸ்திரிகளின் திருஎன்புகள் மிலான்நகரின் முதலாவதுயூஸ்ரோர்ஜியஸ் மேற்றிராணியாராலே அவரதுநண்பரான கொன்ஸ்ரன்ரீன்சக்கிரவர்த்தியின் விசேஷ உபசாரத்தின் பேரில் 330-ம்ஆண்டுவரையிலே கொன்ஸ்ரான்ரிநோப்பிள் நகரிலிருந்து மிலான்நகருக்குக்கொண்டு போகப்பட்டனவென்று பாரம்பரியம் கூறுகின்றது. ஆனல், இந்தத்திருஎன்புகள் 1161-ம் ஆண்டு யுத்தவெகுமானங்களாகப் பிறடெறிக் பார்பறொஸ்ஸார் சக்கிரவர்த்தியால் ஜேர்மனிக்கு எடுத்துக்கொண்டுபோகப்பெற்றுக் கொலோன்நகர் ஆசனக்கோவிலிலே வைக்கப்படலாயின. மிலான்நகரமக்கள் மதித்தற்கரிய தங்கள்பொக்ஷமாகிய இத் திருப்பண்டங்களைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளுமாறு ஏறக்குறைய எட்டுநூற்றாண்டுகளாக முயன்றுவந்தார்கள்.

ஆனல், அர்ச். சாள்ஸ் பறோமியார்போலும் அத்துணைமகிமை வாய்ந்தஒருவரே பலவருடகாலமாக எடுத்துக்கொண்டமுயற்சி பலன்தராதுபோனபின்னர் கருதினல்அந்திரேயா பெருனி ஆண்டவர் திருஎன்புகளின் ஒருபகுதியை 1904-ம்ஆண்டு கொலோன்நகர் அதிமேற்றிராணியாரிடமிருந்து திரும்பப்பெற்றுக்கொள்வதில் வெற்றிகாணலாயினர். இவைகள் ஓர்புயத்தையும், ஒருகால்எலும்பையும் ஒருமுதுகெலும்பையும் அடக்கியிருந்தன. இவைகள் சோதிடசாஸ்திரிகள்மூவரிலும் வயதிலே அதிகம் இளமையானவரின் சரீரத்தைச் சேர்ந்தவையென்று நம்பப்படுகிறது. இந்தத்திருஎன்புகளைக் கொண்டு "பஸிலிக்கா றேகும்" அதாவது அரசர்களின் மகா தேவாலயத்தைநோக்கி (அர்ச். யூஸ்ரோர்ஜியஸ் மகாதேவாலயமென்றும் இது அறியப்படுகிறது) 1904-ம்ஆண்டு தைமாதம்6-ந்திகதியன்று நடைபெற்ற சுற்றுப்பிரகாரமானது வழமையிலேஇல்லாத மகாஆடம்பரமானதொன்றாய் இருந்தது. இத்திருஎன்புகள் ஜேர்மனியில் இருந்துவந்த காலத்திலும் மிலான்நகரமக்கள் சோதிடசாஸ்திரிகளில் கொண்டிருந்த பக்திபற்றுதல் ஒருபோதுமே குறைவுபடவில்லை. 14-ம்நூற்றாண்டிலிருந்து 19-ம்நூற்றாண்டுவரையிலே அவர்களின்சரித்திரசம்பவம் மகாதேவாலயத்துக்கு வெளியே வருடந்தோறும் நடித்துக்காண்பிக்கப்பட்டுவந்தது. வருடந்தோறும் இந்தத்திருநாளன்று பிரபுக்கள்மூவர் சோதிட சாஸ்திரிகளைப்போல வேடந்தாங்கி மிலான்நகர் வீதிகளினூடாகப் பெரிய ஊர்வலமாகச் சுற்றிவருவார்கள்.

ஜேர்மனியிலிருந்து திரும்பவும் கொண்டுவரப்பட்ட திருஎன்புகள் முன்னர் அவர்களின்உடல்கள் வைக்கப்பட்டிருந்த அதே பேழையிற்றானே பூச்சியமாக வைக்கப்படலாயின. இந்தப் பேழை அக்காலத்திலே பிரேதப் பேழைசெய்வதற்கென்று கிரேக்கரால் உபயோகிக்கப்பட்ட சுண்ணக்கல்கொண்டு செய்யப்பட்டதாகும். ஆனல், மிகப்பெரிதும், அலங்கரிக்கப் படாததுமாகும். இது பிற்பட்ட றோமைச்சக்கிராதிபத்தியத்தைச் சேர்ந்தது. கொன்ஸ்ரன்ரீன் சக்கிரவர்த்தியாலே தமதுசொந்தக்கல்லறைக்கென்றே சித்தஞ்செய்யப் பட்டதென நம்பப்படுகின்ற இந்தப் பேழையானது திருஎன்புகள் வைக்கப்பட்டபின் கொன்ஸ்ரான்ரிநோப்பிள்நகரிலிருந்து மிலான் நகர்வரையிலே முழுப்பாதைநீளமும் எருதுகளால் இழுக்கப் பட்டுச்சென்றதாகப் பாரம்பரியம்தெரிவிக்கின்றது. "மூன்று சோதிடசாஸ்திரிகளினதும் கல்லறை"யென்றுமாத்திரம் வெறுமையாகப்பொறிக்கப்பெற்ற அவர்களின் கல்லறை அம்மகா தேவாலயத்தின் வலதுசிறகிலே அமைந்திருக்கிறது.

## யூதர்களின் இஸ்ருயேல் இராச்சியம்

*அராபிய உலகமென்னும் கடலிலே ஓர் சின்னஞ்சிறு 'துவீபம்'தான் இஸ்ருயேல். எந்தச்சமயத்திலும் அராபிகளின்தாக்குதல் ஏற்படக்கூடுமாதலின், இஸ்ருயேல் தனதுஎல்லைகளைச் சதாகண்ணுங்கருத்துமாகக் கண்காணித்துவருகிறது. இஸ்ருயேலர்கள் அராபிகளுடன் பெரும்போர்நடத்தி 1949-ம்ஆண்டு கையெழுத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் அராபியபிராந்தியத்தின் ஒருபகுதியைச் சுவீகரித்துக்கொண்டனர். அராபிகளின்சவாலை ஏற்பதற்காக அமெரிக்காவின் பேருதவியுடன் சுமார் 100,000 கொண்ட ஒருபிரமாண்டமான இராணுவத்தைத் தயாராகவைத்துக்கொண்டிருக்கும் இந்தயூதநாட்டின் சுருக்கமானவரலாறு வருமாறு:*

இஸ்ருயேல்என்பது யூதசாதியினரின் தாயகம். பலஆண்டுகளாகப் பலஇன்னல்களை அனுபவித்தபின் அவர்கள் தங்களது பொதுவிரோதிகளான அராபியநாடுகளின்மத்தியில் தங்களுக்கெனஒருதாயகத்தை அமைத்துக் கொண்டார்கள். 1948-ம்ஆண்டு வைகாசிமாதம் 14-ந்திகதிவெளியிடப்பட்ட ஒருபிரகடனத்தின் மூலம் "இஸ்ருயேல்" சுதந்திர இராச்சியம் ஸ்தாபிக்கப்பட்டது. அதுநிறுவப்பட்டதிலிருந்து அராபியநாடுகளுடன் நேரடியாகவோ, அன்றேல் மறைமுகமாகவோ அடிக்கடி மோதிவந்திருக்கிறது. இதுவரை ஏற்பட்டுள்ள எல்லைப் புறச்சண்டைகள் கொஞ்சமல்ல. மலைபோன்ற அராபிய எதிர்ப்புகளையெல்லாம் இச்சின்னஞ்சிறு நாடு வெற்றிகரமாகச் சமாளித்துக் கம்பீரமாகத் தலைதூக்கிநிற்பது உலகஅதிசயங்களில் ஒன்றாகும். அம்மட்டா? அராபியநாடுகளின் தலைவனான எகிப்துமீதும் சூயெஸ்சம்பவத்தின்போது இஸ்ருயேல் படையெடுத்ததென்றால், அதன் துணிகரத்துக்கு வேறு என்ன அத்தாட்சிவேண்டும்?

இஸ்ருயேல் இராச்சியம் 8,000 சதுரமைல் விஸ்தீரணமான ஒரு சிறுநாடு. அதன் சனத்தொகையோ இலங்கையின் சனத்தொகையில் நாலில்ஒருபங்கைவிடக் குறைவானது. அதாவது, 20லட்சம் மக்கள்தான் அங்கே வசிக்கிறார்கள். அவர்களில் சுமார் 18லட்சம்பேர் யூதர்கள். ஆனல், இஸ்ருயேலில் அரசியற்கட்சிகளுக்குமட்டும் குறைவில்லை. இதன் பாராளுமன்றத்திலே 15கட்சிகள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. இது ஒருகுடியரசுநாடு. ஜனதிபதியின் பதவிகாலம் ஐந்து வருடங்களாகும். அங்கு ஒருகூட்டுஅரசாங்கம்தான் ஆட்சிபுரிகிறது. பிரதமர் பென்குரியனும், வெளிநாட்டுமந்திரி திருமதிகோல்டா மயர்ஷனும் மாபாய்எனப்படும் தொழில்கட்சியைச் சேர்ந்தவர்கள்.

தலதாபனங்கள் முனிசிபல் கோர்ப்பறேசன், தல கவுன்சில், பிராந்திய சபையென மூன்று வகைப்படும். பிராந்தியசபைகள் விவசாயப்பகுதிகளில் அமைக்கப் பட்டுள்ளன. விவசாயக் குடியேற்றதிட்டங்களெல்லாம் பிராந்தியசபைகளின் அதிகாரத்துக்குட்பட்டவைகள். 1950-ம்ஆண்டு ஜெருசலேம்பட்டணம் இஸ்ருயேலின் தலைநகராகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஹய்வாவும், டெல்-அவிவும் (ஜாப்பா) மற்றும் இருமுக்கிய நகரங்களாகும்.

எபிரேயம்தான் இஸ்ருயேலின் உத்தியோகமொழியாகும். அராபியம் இரண்டாவது மொழியாகும். அராபியமக்களுடன் அரசாங்கம் அவர்களின் மொழியில்தான் கடிதப் போக்குவரத்து நடத்துகிறது. உயர்தரக்கல்விக்கும், ஆராய்ச்சிக்குமான ஒரு எபிரேய சர்வகலாசாலை ஜெருசலேமில் இருக்கிறது. நாடுமுழுவதும் சட்டாயக்கல்விச் சட்டம் நடைமுறையிலிருக்கிறது. ஆரம்ப

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# லே அன் பிறே

# LEY & FREY

## முதன்மைபெற்ற வீட்டுப்பறவைகள், மிருகங்களின் உணவு வியாபாரிகள்

கொழும்புமாநகரிலே அரைநூற்றுண்டுகளுக்குமேல் நாம் பெற்றுள்ள அனுபவத்தைக்கொண்டு ஆடுகள், மாடுகள், கோழிகள் முதலாம் நீங்கள் வளர்க்கும் சீவபிராணிகளுக்கு உணவூட்டுவதற்கும், பேணிப் பராமரிப்பதற்குமாக உங்களுக்குத் தேவைப்படுகிறவைகளையெல்லாம் உதவும் சேவையில் தற்போது நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

(வீட்டுப்பறவைகள், மிருகங்கள் ஆதியவற்றின் உணவு நிபுணர்கள்)

உலகப்பிரசித்திபெற்ற (ஐரோப்பிய - அமெரிக்க) மருந்துகளை இருப்பில் வைத்திருக்கிறோம். பெரும்பாலான பாடசாலைகளும், மற்றும் மதஸ்தாபனங்களும் நம்மை ஆதரிக்கின்றன.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லிவீதி, 21/2 எனும் இலக்கத்தில் தகுந்த ஆயத்தங்களுடன் தற்போது ஒரு கிளை ஸ்தாபனத்தைத் திறந்திருக்கிறோம்.



### பறவைகளுக்கு

| | ரூத். | ரூ. ச. |
|---|---|---|
| முட்டைவர்த்தினி: 1-ம் நம்பர். | | |
| முட்டை இடும் கோழிகளுக்கான தானியக்கலவை — | 100 | 26–00 |
| முட்டைவர்த்தினி: 2-ம் நம்பர். | | |
| முட்டை இடும் கோழிகளுக்கான தானியக்கலவை — | 100 | 24–00 |
| முட்டைசுரபி: | | |
| முட்டை இடும் கோழிகளுக்கான தாதுப்பொருட்கலவை | 100 | 21–00 |
| ஷை சிவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது — | 100 | 22–00 |
| சீவசுரபி: | | |
| வளரும்பறவைகளுக்கான தாதுப்பொருட்கலவை — | 100 | 19–00 |
| ஷை சிவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது — | 100 | 20–00 |
| கொழுக்கும் தீனி: சாப்பாட்டுக்கு வளர்க்கப்படும் பறவைகளுக்கான விசேடகலவை உணவு — | 100 | 19–00 |
| குஞ்சுவர்த்தினி: குஞ்சுக்கான தானியக்கலவை — | 100 | 26–00 |
| குஞ்சுச்சுரபி: சிறுகுஞ்சுகளுக்கான தாதுப்பொருட்கலவை | 100 | 23–00 |
| ஷை சிவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது — | 100 | 24–00 |
| வான்கோழி உணவு: | | |
| முட்டை இடும் பறவைகளுக்கான கலவை — | 100 | 19–00 |
| தாரா, வாத்து உணவு: | | |
| முட்டை இடும் பறவைகளுக்கான கலவை — | 100 | 19–00 |



### மிருகங்களுக்கு

| | ரூத். | ரூ. ச. |
|---|---|---|
| அமுதசுரபி: 1-ம் நம்பர். பாற்பசுக்களின் கலவைஉணவு. பிண்ணாக்கு, துவரஉமி, உழுந்துமூக்கு, மைசூர்உமி, கடலைமா, கடலைக்கோது, கோதுமைத்தவிடு, உலோகச்சத்துக்கள், சோழம் என்பன விகிதசாரமாகக் கலக்கப்பட்ட உணவு — | 100 | 18–00 |
| ஷை சிவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது — | 100 | 19–00 |
| அமுதசுரபி: 2-ம் நம்பர். — | 100 | 17–00 |
| எருத்துமாட்டுத்தீனி: வண்டி இழுக்கும் மாடுகளுக்கும், வசப்பிழையான எருதுகளுக்குமான கலவைஉணவு — | 100 | 17–00 |
| சாதாரண கலவை: 1-ம் நம்பர் — | 100 | 15–00 |
| சாதாரண கலவை: 2-ம் நம்பர் — | 100 | 14–00 |
| மீன் தீனி: வீட்டில் வளர்க்கப்படும் மீன்களுக்கான உணவு சிக்கனமான அளவில் சிறிய டப்பாக்களில் அடைக்கப்பட்டது. | ¼ ரூத்தல் | –50 |

—※—

| | | |
|---|---|---|
| மீன்சத்து: கலவைகளுக்கு — | 1 | –30 |
| சுண்ணக்கலவை: — | 1 | –30 |
| எலும்புச்சத்து: சுத்திசெய்யப்பட்டது — | 1 | –50 |
| மீன் சுரல் நெய்: | ஒரு கலன் | 15–50 |
| மீன் சுரல் நெய்: | ஒரு போத்தல் | 3–29 |

மேலும் தேவையான விவரங்களுக்கு:

லே அன் பிறே

தலைமை ஸ்தாபனம்:
65, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.
T. Phone: 2751. — T. Gram: "EDRAJ"

கிளை ஸ்தாபனம்:
21/2, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.


● கடந்த 33 வருடகாலமாக வத்திக்கானிலே வைத்தியசேவை செய்து வந்துள்ளவரான டக்றர் பிலிப்போ றெக்கிஅவர்கள் பாப்பாசரின் நிரந்தரமான சொந்தவைத்தியராக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். 58 வயதுடையவரான இவர் வத்திக்கான் சுகாதாரசேவையின் தலைவராவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

● நத்தால்பண்டிகை காலத்திலே கிறிஸ்மஸ்காட்டுகள் அனுப்பும்வழக்கம் வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருவதாலே அவைகளைத் தபாலில் அனுப்பிவைப்பதற்குப் பெருந்தொகையான தபால்முத்திரைகள் தேவைப்படுகின்றன. அதனால் ஒருதொகையான நாடுகள் அக்காலத்திலே விசேஷ தபால்முத்திரைகளைப் பாவனைக்கு விடுத்துத் தேவையைப் பூர்த்திசெய்து வருகின்றன. கனடாதேசம் 1898-ம் ஆண்டு முதல் விசேஷகிறிஸ்மஸ்முத்திரைகளைப் பாவனைக்குவழங்கிவருகிறது.

● பிரித்தானிய மந்திரிசபையில் இதுவரை ஒரேயொரு கத்தோலிக்க மந்திரியே இருந்துவந்தார். இவர் குடியேற்றநாட்டுக் காரியாலயத்திலே இராச்சியமந்திரியான பேர்த்தின் ஏள் பிரபுவாவர். தற்போது மற்றோர்கத்தோலிக்கரான திரு. ஹியு பிறேசர் எம். பி. அவர்கள் இராச்சியஉதவிமந்திரியாயும், யுத்தகாரியாலய நிதிமந்திரியாயும் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் 6-வது லோட் லொலாற்பிரபுவின் இரண்டாவதுபுதல்வராவர்.

● சுதந்திர தென்கோறியநாட்டில் தற்போது 3,54,843கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். இவர்களைத் தவிர ஞானஸ்நான ஆயத்தகாரராய் 1,02,592பேர் இருக்கின்றனர். தென்கோறியா 230சுதேசகுருமாரையும், நான்கு சுதேசமேற்றிராணிமாரையும், 536சுதேசகன்னியாஸ்திரிமாரையும் கொண்டிருக்கின்றது. அங்குள்ள ஒரே ஒரு குருமடத்திலும், வெளி நாடுகளிலுள்ள குருமடங்களிலும் 455 குருத்துவமாணவர் படித்துவருகின்றார்கள்.

● தாம்கொண்டுள்ள "அமலோற்பவ தபற்று"க்குச்சான்றாகப் பாப்பரசர் செஸ்ரோகோவாவிலுள்ள போலிஷ் திருசேத்திரமாகிய ஜஸ்னகோறு சந்நியாசஆச்சிரமத்துக்குத் தங்கக்கதிர்ப் பாத்திரம்ஒன்றை அன்பளிப்பாகப் போலிஷ்கருதினலான விசின்ஸ்கிஆண்டவர்மூலம் அனுப்பிவைத்திருக்கின்றார்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

### திருப்பாலத்துவ சபைப் பரிபாலகர்

பாப்பரசரின் திருப்பாலத்துவ சபைப் பரிபாலகர் பதவியைப் பாப்பரசர்தானே இப்போது வகித்திருக்கின்ருர். வழமையிலே கருதினல் ஒருவர்தான் இந்தச்சபையின் பரிபாலகராய் இருந்துவந்தார். ஆனல், பரிசுத்தபிதா இந்தச்சபைமட்டிலே தாம்கொண்டுள்ள பெருமதிப்பின் அறிகுறியாக இந்தநடவடிக்கையை எடுத்திருக்கின்ருர். விசுவாசப் பரப்புதல் சபையின் முன்னைநாள் தேசிய தலைவராயிருந்த பாப்பரசர் வேதபோதக நாடுகள்மட்டிலே தாம் கொண்டிடிருந்த அணைகடந்த பற்றுதல் காரணமாகப் பிரஸ்தாபமாக அறியப்பெற்றிருந்தார்.

### ஜனுவாரியாரின் திருஉதிரம்

நேப்பிள்ஸ்நகரின் பாதுகாவலரான அர்ச். ஜனுவாரியாரின் திருஉதிரம் மார்கழி 16-ந் திகதியன்று மிகவும் அபூர்வமாகவே உருகி நீர்மயமாகின்றது. ஆனல், வைகாசி, புரட்டாசி மாதங்களில் ஏறக்குறைய எப்போதுமே உருகி நீர்மயமாகிவிடும். சென்ற வருடமோ மார்கழி 16-ந் திகதியன்று சாயந்தரம் நேப்பிள்ஸ் நகர் ஆசனக்கோவிலில் பெருந்திரளான மக்கள் தேங்கியிருந்த போது உருகி நீர்மயமாயிற்று. வழமையிலே இந்தப்புதுமை அர்ச்சியசிட்டரின் திருநாளன்றும், அவர் வேதசாட்சியான வருடாந்த ஞாபகதினமன்றுமே நிகழ்ந்துவருகிறது.

### வத்திக்கானின் முகாமைக்காரர்

இத்தாலிய அரசாங்கத்தாலே 1929-ம் ஆண்டுபரிசுத்தஸ்தானத்துக்கு வழங்கப்பட்ட சொத்துகளையெல்லாம் முகாமைவகித்துப் பரிபாலித்து வந்தவரான சிஞ்ஞோர் பேர்னுட் நோகாரு அவர்கள் மிலான்நகரிலே தமது 88-ம் வயதில் சமீபத்திலே காலஞ்செ[illegible]யினர். இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் இவர் தம்பதவியிலிருந்துவிலகி இளைப்பாறியிருந்தார். இவர் பரிபாலித்துவந்தசொத்துகள் 1870-ம் ஆண்டு இத்தாலிய அரசாங்கம் பறிமுதல்செய்த பாப்பரசின் நாடுகளுக்கு நஷ்டபரிகாரமாகக் கொடுக்கப்பட்டனவாகும். இந்த நஷ்டபரிகாரம் லத்தறன் உடன்படிக்கைப்படி செய்யப்பட்டதாகும்.

### குருடர்களின் பூசைப்புத்தகம்

குருடர்களுக்கான ஞாயிற்றுக்கிழமைப் பூசைப்புத்தகம் ஒன்று குருடர்களுக்கென இருந்துவருகின்ற ரோயல் தேசியஸ்தாபனத்தால் பிறெய்லி எழுத்துமுறையிலே லண்டன்நகரில் பிரசுரஞ்செய்யப் பட்டிருக்கிறது. நிருபங்கள், சுவிசேஷங்கள், இலத்தினிலும், ஆங்கிலத்திலுமுள்ள பூசைஒழுங்குகள் ஆகியவற்றின் நொக்ஸ் மொழிபெயர்ப்பையே இப்புத்தகம் தருகின்றது. வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராணியாரான கருதினல் கொட்பிறி ஆண்டவரது அங்கீகாரத்தைப் பெற்று, அச்சிடுதற்காக விசேஷ அனுமதியைக் கொண்டுள்ள இப்புத்தகமே குருடர்களுக்கெனப் பிரசுரஞ் செய்யப்பெற்ற முதலாவதுபூசைப்புத்தகமாகும்.

### லிசியேபதிப் புதிய சிற்ருலயம்

குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள் ஞானஸ்நானம் பெற்றதும், உறுதிப்பூசுதல்செய்யப்பெற்றதும் லிசியேபதியிலுள்ள ஆசிர்வாதப்பர்சபைக் கன்னிகா ஆச்சிரமத்தின் சிற்ருலயத்திலாகும். 1944-ம் ஆண்டு வீசப்பெற்ற வெடிகுண்டுகளால் அழிவடைந்த இச்சிற்ருலயம் திரும்பவும் தற்போது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. புதிய சிற்ருலயத்தின் அத்திபாரக்கல்லில் அர்ச். தெரேசம்மாளின் பதக்கம் ஒன்றும், ஆச்சிரமத்தின் சரிதை பொறிக்கப்பெற்றுக் கையினல் சித்திரந்தீட்டிய தோற்சாசனம் ஒன்றும் வைக்கப்பட்டிருக்கின்றன. 1944-ம் ஆண்டு குண்டுகள் வீசப்பெற்ற போது இந்த ஆச்சிரமத்தில் இருந்துவந்த 22 கன்னியாஸ்திரிமார் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் ஓர் குதிரைலாயத்தில் சஞ்சரித்துவந்தனர். லிசியேபதிக்கு அடிக்கடி திரளாகச்செல்லும் யாத்திரிகர்கள் இந்த ஆச்சிரமத்தையும் தரிசித்து, அதிலே அர்ச். தெரேசம்மாளால் புனிதமாக்கப்பெற்ற ஸ்தலங்களையும் சந்தித்துத் திரும்புகிருர்கள்.

### பிரான்ஸிய பாராளுமன்றத்தின் அதிவிருத்தாப்பிய அங்கத்தவர்

தேசியமகாசபையெனஅழைக்கப்படுகின்ற பிரான்சியபாராளுமன்றம் பரீஸ்நகரிலே அன்று திங்கட்கிழமை கூடியபோது, அதற்குத் தலைமை வகித்தவர் டிஜொன்நகரின்மேயரும், 84வயதுடையவருமான வண. கனன் கேர் சுவாமியாரே. பிரான்சிய குடியரசின் சரித்திரத்திலேயே அதன் பாராளுமன்ற கூட்டம் ஒன்றுக்குக் குருவானவர்ஒருவர் தலைமைவகித்தது இதுவேமுதன்முறையாகும். இவர் பிரான்சிய பாராளுமன்ற அங்கத்தவர்களிலே வயதில் அதிகம்முதிர்ந்தவர். 1946-ம் ஆண்டிலே முதன்முதலாக அதன் அங்கத்தவராகத் தெரியப்பெற்றவர். சபாநாயகர்ஒருவரைத் தெரிவுசெய்வதற்காகவே அன்றுதினம் அவர் அதற்குத் தலைமைவகித்தார். இவர் பிரான்ஸிலே அதிக பிரஸ்தாபம் பெற்றவர்களில் ஒருவர். ஓர்குருவானவர் என்பதைவிட்டும், பிரான்ஸை ஜேர்மனியர் அடிப்படுத்தியிருந்த காலத்திலே ஆற்றிய வீரத்துவ தொண்டுகளையிட்டும் இவர் அத்தேசமுழுவதிலும் வெகுவாக நேசித்துச் சங்கிக்கப்படுகிறவர்.

### சிங்கப்பூரும் சமய கல்வியும்

சிங்கப்பூரின் கல்விமந்திரியும், மெதடிஸ்ற்சபைப் புரொட்டஸ்தாந்தருமான திரு. சூ சுவீச்சி அவர்கள் அங்குள்ள அரசாங்க பாடசாலைகளெல்லாம் சமயநூல், அல்லது நீதிநூல் படிப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டிருக்கின்ருர். பிள்ளைகள் செய்யும் குற்றச்செயல்களைத் தடுத்துக் குறைப்பதற்கும், கம்யூனிஸத்தை எதிர்த்துத் தடுப்பதற்குமாகத் தொடக்கப்பட்டுள்ள ஓர்கவமான இயக்கத்தின் ஓர்பகுதியே இந்த நடவடிக்கையாகும். தங்கள்பிள்ளைகளுக்கு என்னசமயம் படிப்பிக்கப்பட வேண்டுமென்பதைப் பெற்றேரே தீர்மானிப்பார்கள். சமயஸ்தாபனங்களால் தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்களாலேயே சமயகல்வி பயிற்றப்படும். சுமார் 4,000 பிள்ளைகள் கத்தோலிக்க சமயகல்வியும், 6,000 பிள்ளைகள் இந்துசமய கல்வியும், 14,000 பிள்ளைகள் இஸ்லாம் சமய கல்வியும், சுமார் 4,600 பிள்ளைகள் புரொட்டஸ்தாந்த சமயகல்வியும் அளிக்கப்படுவார்கள்.

### முதலாவது மிஷன்கப்பல்

நாடுகடத்தப்படுமுன் செஞ்சீனச்சிறைச்சாலைஒன்றிலே இரண்டுவருடகாலம் செலவிட்டுள்ளவரான திவ்வியவார்த்தையானவர் சபையைச்சேர்ந்த ஒல்பேட் மேற்றிராணியார் இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் ஜேர்மனியிலேகட்டப்பெற்ற 'ஸ்ரெல்லா மாறிஸ்' என்ற முதலாவது மிஷன்கப்பலை இந்தப்புத்தாண்டின் ஆரம்பத்திலே அர்ப்பணஞ்செய்யவிருக்கின்ருர். புளோர்ஸ் என்ற இந்தோனீஸிய தீவிலே முன்சொன்னசபைக்குருமாரால் உபயோகிக்கப்படவிருக்கும் இந்தமிஷன் கப்பல் 100 தொன்நிறைகொண்ட மோட்டர் கப்பலாகும். சுதந்திரமேற்கு ஜேர்மனிய கத்தோலிக்கரே இதற்குவேண்டியபணத்தைச் சேகரித்துக்கொடுத்தார்கள்.

### ஆர்ஜென்ரினுவும் திருச்சபையும்

பாப்பரசரின் மகுடதாரண விழாவிற்குச் சமூகமளித்திருந்த ஆர்ஜென்ரினுவின் தூதுக்கோஷ்டிக்குத் தலைமைவகித்தவர், அந்நாட்டின் சமயவிவகார உதவி மந்திரியான திரு. ஆஞ்ஜெல் சென்ரிநோ அவர்களே. ரோமைநகரில் இவர் பேசியபோது, "ஆர்ஜென்ரினுவிலே திருச்சபைக்கும், அரசாங்கத்துக்குமிடையில் தற்போது மனப்பூர்வமான நேசஉறவு இருந்துவருகிறது; எமது நாட்டில் சமயப்பிரச்சினையே இல்லை; எமது ஜனதிபதி நாட்டின் சமய அடிப்படையைப் பலப்படுத்தவே ஆசிக்கின்ருர்; இதுவிஷயமாய்த் திருச்சபையின் செல்வாக்கானது மகாவிசேஷப்பட்ட சக்திகளில்ஒன்ருய் இருந்துவருகிறது" எனக் கூறலாயினர்.

### பாப்பரசரும் புதிய வருடமும்

பரிசுத்த பிதாவுக்குத் தங்கள் புதுவருட சோபன வாழ்த்துகளைச் சமர்ப்பிப்பதற்கும், அதற்குப் பிரதியாகச் சம்பேதுருவானவர் மகாதேவாலய மைதானத்திற்குமேலாகத் தோன்றும் அவரது மாளிகைச் சன்னலிலிருந்து அவரால் தாங்கள் ஆசிர்வதிக்கப்படுவதற்குமாக ரோமையின் சகல பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான திரும் வண்டிச்சாரதிகள் அன்றுதினம் அம்மைதானத்தில் ஒன்றுகூடினர்கள். பாப்பரசர் 1958-ம் ஆண்டின் கடைசி மணித்தியாலத்தைத் தமது சின்னக் கோயிலிலே தமது மாளிகைப்பரிசனர்களுடன் செலவிடலாயினர். பழையவருடத்தின் இறுதியை முன்னிட்டுத் "தெதேயும்"என்ற தேவதோத்திரகீத பாடலுக்கு முதன்மைவகித்தபின் 1959-ம் ஆண்டுக்குத் தேவனுடையஆசீர்வாதத்தை இரந்து கேட்கும் "வேனிக்கிறேயாத்தோர்"எனும் கீதபாடலுக்குத் தலைமைதாங்கினர்.

### இளைஞர்கள் சமூகமாகாத பூசை

ருஷியாவிலே லெனின்கிருட் நகரிலுள்ள கத்தோலிக்க கோவில்ஒன்றில் நிறைவேறிய திவ்வியபூசைக்குச் சமூகமாயிருந்த 500 பேரிலே 15 ஆடவர்கள் மாத்திரமே இருந்தனர்; இவர்கள்எல்லோருமே நடுவயது, அன்றேல் அதிலும்கூடிய வயதுள்ளோராய் இருந்தனர்; 40 வயதுக்குக் கீழ்ப்பட்டோராய்ப் 12 பெண்கள் மாத்திரமே இருந்தனர்; இளவயதுடையவர்கள் எவருமே இருக்கவில்லையென்று சோவியற்ருஷியாவுக்கு விஜயஞ்செய்த ஓர்அமெரிக்கதரிசகரான டக்றர் ஏர்பன் பிளீஜ் தெரிவித்திருக்கின்ருர். அமெரிக்க ஐக்கியதேச தெ போல் சர்வகலாசாலையின் கல்விப்பகுதித் தலைவரான இவர் மேலும் பேசியவிடத்து, ஆயினும் அப்பூசையில் சமூகமாயிருந்த பக்தர்குழாம் "எனது சீவியத்தில் நான் ஒருபோதுமே அதுபோலக் கண்டிராத அத்துணை பத்திவேகத்துடனும், மனச் சுத்தத்தோடும்" செபஞ் செய்துகொண்டிருந்ததெனக் கூறியிருக்கின்ருர்.

## தைமாதம்

**பொதுக்கருத்து:** விசுவாசிகள் அனைவரும் "திருச்சபையோடு சேர்ந்துஉணரும்" மனப்பான்மையைப் பெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** திருச்சபையின் ஒற்றுமை மக்களை விசுவாசத்திற்குக் கவர்ந்திழுப்பதற்காக மன்றாடிக்கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு

தைமாதம் 15-ந் திகதி


## எமது நாட்டின் இன்றைய நிலை

"சிங்களரால்மாத்திரமே இலங்கைக்குச்சுதந்திரம் வெற்றிகொள்ளப் படவில்லை. அதை சிங்களவர், தமிழர், பேர்கர், முஸ்லீம்கள் ஆதியாம் அனைவராலுமே வெற்றிகொள்ளப் படலாயிற்று; இன்று எமதுநாடு வேண்டுவதெல்லாம் வேறாகப் பிரிந்து தனித்தனியே நிற்க ஆசிக்கிறவர்களைவிட, ஒன்றாகச் சேர்ந்து நிற்கக்கூடிய மக்களையேயாகும்; பல்வேறுசாதியங்கள், சமூகங்கள், சமயங்களிடையே பலவித வேற்றுமைகளைக் கிளப்பிவிடுமாறு சிலசக்திகள் முயன்றுவருகின்றன; இந்தவேற்றுமைகள் கருத்திற்கொள்ளப்படத் தக்கனவன்று; ஏனெனில், பலநூற்றூண்டுகளாக எம்மிடையே வசித்திருந்து, நாட்டிலே ஓர்உரிமையான இடத்தை வகித்துள்ள பல்வேறுசாதியங்களைச் சேர்ந்துள்ளவர்களும், சமயநம்பிக்கைகளை உடையவர்களுமான மக்கள் அநேகர் இந்நாட்டிலே வாழ்கின்றனர்; அதனால் சகல மக்களும் சமாதானமாய் ஒன்றுபட்டு வாழவேண்டும்; எமதுநாடு வெற்றிகொண்ட சுதந்திரத்தை இழந்துபோகாது, அருமை பாராட்டி அதனைப்பேணிப்பாதுகாத்துவருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்" என அன்றொருநாள்நிகழ்ந்தபொதுக் கூட்டம்ஒன்றிலே நிதிமந்திரி திரு. ஸ்ரான்லி டி சொய்சா கூறினார். "ஓர்நாட்டின் உடன்பிரசைகளாய்ச் சிநேகபான்மையாக ஒன்றுபட்டு வாழ்ந்துவரக் கூடியதாகப் பெரும்பான்மையினரின் நீதியானஉரிமைகளை ஆதரித்துப் பாதுகாக்கும்போது, சிறுபான்மையினருக்கும் நீதி வழங்கவேண்டும்; பட்சபாதமில்லாது அவர்களை நடத்தவேண்டும்" என்று பிரதமர் பண்டாரநாயகா சிறுபான்மையினரில் கரிசனையுடையவராய்க் கூறிவருகின்றார். "அரசாங்கம் நாடுமுழுவதும் சமாதான கமிற்றிகளை ஆக்கியிருக்கின்றது; ஆனால், எம். பி. களும், மந்திரிகளும் பிணக்கு, குரோத விரோதம், கலகத்துக்கான விதைகளை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் சமாதான கமிற்றிகளின் முன்னணியிலே குருமாரைப் போட்டுவிட்டுப் பின்னால் பகை, விரோதத்தைப் போதிக்கின்றார்கள்" என அன்று கத்தோலிக்க பாடசாலை ஒன்றின் திறப்பு விழாவின்போது கனம். மெத்தானந்த மகாதேரோ என்ற புத்தகுரு பேசியிருக்கின்றார். எமதுநாட்டின் இன்றைய நிலைமையை விளக்கும் எடுத்துக்காட்டுகளாக நாம் எடுத்துக்காண்பிக்கக் கூடியவற்றிலே இவை சிலவாகும். சுருங்கக்கூறுமிடத்து, இன்றையநிலைமை போன்று ஒருஅமைதியற்றநிலை எமதுநாட்டின் நீண்டசரித்திரத்திலே இதற்குமுன் ஒருபோதுமே இருந்ததில்லை எனலாம். இந்த நிலைமையிலே, பெரும்பான்மைச் சாதியத்தாரிடையே ஐக்கியம் நிலவுகின்றதா என்றால், அதுதான் இல்லை. அவர்களெல்லாம் பல்வேறு அரசியற் கட்சிகளாயும், பல்வேறு பெரமுனைகளாயும் பிரிந்து ஒன்றையொன்று—ஒருவரையொருவர் குரோதித்து விரோதித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். சிறுபான்மைச் சமூகத் தமிழர்களிடையே ஐக்கியம்நிலவுகின்றதா? அதுவுமில்லை. சிறுபான்மையினரான இவர்களும் தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி, லங்கா சமசமாஜகட்சி, கம்யூனிஸ்த கட்சி, அடங்காத்தமிழர் முன்னணி, அடிப்படை யுரிமை முன்னணி என்பனவாகக் கூறுபோடப்பட்டு, ஒருவரின்கொள்கையை மற்றொருவர் கண்டிப்பதும், ஒருகட்சியினர் மற்றொரு கட்சியினரைக் கடிந்துகொள்வதும், ஒருவருக்கொருவர் சவால் விடுவதுமாய் இருந்துவருகிறார்கள். அதனால், இவர்கள்பாடு இறுதியிலே என்னவாய் முடியும்? ஆட்டுக்கடாச்சண்டையிலே நரி இரத்தம் குடித்த வாறாய்த்தான் முடியுமென்றால் மிகையாகுமா?

---

# சுதேச வர்த்தமானம்

### அடுத்த பொதுத்தேர்தல்

அடுத்த பொதுத்தேர்தலைப் பின்போடுவதற்காகவே அரசாங்கம் தொகுதி நிர்ணயக் கம்மிஷனை நியமித்ததென்று எங்கும் பேச்சாய் இருந்துவருகிறது. ஆனால், சென்ற திங்கட்கிழமை பிற்பகல் கூடிய சனப்பிரதிநிதிகள்சபையிலே தேர்தல் பின்போடப்பட மாட்டாதென்றும், தேர்தலுக்குமுன் தொகுதிநிர்ணயக் கம்மிஷனின் வேலை முடிந்துவிடுமென்றும், அதனால் உரியகாலத்தில் — அதாவது 1961-ம் ஆண்டில் நடைபெறுமென்றும் பிரதமர் பண்டாரநாயகா உறுதி கூறியிருக்கின்றார்.

### விபத்துக்குள்ளானகார்

கொழும்புக்குச்செல்லும் றெயில் வண்டியைச் சந்திப்பதற்காகச் சென்ற வியாழக்கிழமை மன்னாரிலிருந்து மதவாச்சிக்குப் புறப்பட்டுவந்த ஓர் கோஷ்டியை ஏற்றிவந்த ஒருகார் செட்டிகுளத்துக்குச்சமீபமாக மரம் ஒன்றில் மோதியதன்விளைவாகச் சாரதி உட்பட அதில்பிரயாணஞ்செய்த அனைவரும் காயமடைந்தனர். இவர்களில்இருவர் வவுனியா ஆஸ்பத்திரியிலும், மற்றும்ஆறுபேர் மன்னார்ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், மூவருக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டதாலும், ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாய் இருந்ததாலும் நாலவரும் உடனடியாக யாழ்ப்பாண அரசினர்பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களிலே செய்யது என்பவர் இறந்துபோயினர். இவர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அப்துல்காதரின் புதல்வராவர்.

### பரிசுத்த லூர்துமாதாதிருநாள்

பரிசுத்த லூர்துமாதாவின் இவ்வருடத்திருநாளைப் பாப்பரசர் மாசிமாதம் 11ந்திகதியிலிருந்து 12-ந்திகதிக்கு மாற்றியிருக்கிறாரென்றும், அதற்குக் காரணம் மாசிமாதம் 11-ந்திகதி விபூதித்திருநாளாயும், பச்சாத்தாபநாளாயும், உபவாசநாளாயும் இருப்பதேயென்றும் வத்திக்கான்நகரிலிருந்து சென்றவெள்ளிக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இந்தமாற்றம இந்தவருடத்துக்குமாத்திரமே செல்லுவதாகும்.

### காலநிலை

மழைக்கோலமும், மந்தாரமும் அதிகமாகக் காணப்படினும் மழைபெய்வதாயில்லை. இரண்டொரு தூற்றல்மாத்திரமே. இன்னும் சிலதினங்களில் மழைபெய்யாவிடில் யாழ்ப்பாணக்குடாநாட்டிலே ஆயிரக்கணக்கான ஏக்கர்வயல்களிலே அரைமட்டம் வளர்ச்சியடைந்துள்ள ஏராளமான நெற்பயிர்கள் வாடிச் சேதமாகிவிடுமென்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே ஆயிரக்கணக்கான ஏக்கர்வயல்களிலே மழையின்மையால் நெற்பயிர்கள் வளர்ச்சிகுன்றிக் கைவிடப்படும்நிலைமையிலே வாடிப்போயிருக்கின்றன.

### கப்பற்சலார் ஏற்றம்

அடுத்துநிகழும் மாசி 2-ந்திகதிமுதல் கொழும்புத்துறைமுகம் வரையிலுள்ள கப்பற்பாதையிலே கப்பற்சலார்விகிதம் கூட்டப்படுமென லண்டன் நகரிலே சென்ற 6-ந்திகதிநடைபெற்ற பிரித்தானிய கப்பற்கம்பெனிகளின் மகாநாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்புத்துறைமுகத்திலே கப்பல்கள்நெடுநாள்காத்துநிற்பதால் கடந்தசிலமாதங்களிலே அதிகதாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன; அதனால், சாமான்களைக் கொண்டுசென்று இறக்குமதிசெய்வதில் செலவுகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளனவென்று மகாநாட்டின் அறிக்கை கூறுகின்றது.

### தமிழரசுக்கட்சி மகாநாடு

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஏழாவதுவருடாந்த மகாநாடு இம்முறை வடமாகாணத்திலே நிகழும்தைமாதம் 31-ம்திகதியும், அடுத்தமாசிமாதம் 1-ந்திகதியுமாகிய இருதினங்களிலும் நடைபெறவிருக்கின்றது. இம்மகாநாட்டுக்கு மலைநாடு, மட்டக்களப்பு, திரிகோணமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணமுதலாம்இடங்களிலிருந்து சமூகமளிக்கும்பிரதிநிதிகளை வரவேற்று, அவர்களுக்கு விடுதி, உணவு முதலாம் உபசாரணைகள்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இலக்கியமகாநாடு, மாதர்மகாநாடு, தொழிலாளர்மகாநாடு, அரசியல்மகாநாடுஎன நான்குபிரிவுகளாக இந்தமகாநாடு நடத்தப்படவிருக்கிறது.

### அகதிகளும் காணிப்பங்கீடும்

வடபகுதியிலே சமீபத்தில் காணிகள்பங்கிடுசெய்யப் படவிருக்கும் புதிய குடியேற்ற திட்டங்களிலே தென்னிலங்கையிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் திரும்பியவர்களுக்குக் கூடுதலான இடமளிக்கப் படவிருக்கிறது. வவுனிக்குளக் குடியேற்றதிட்டத்திலே 160 குடும்பங்களுக்கும், அக்கராயான்குளக் குடியேற்றதிட்டத்திலே 335 குடும்பங்களுக்கும் சமீபத்திலே காணிகள்பங்கிடுசெய்து கொடுக்கப்படும். சென்ற வைகாசிமாதத்தில் நடைபெற்ற வகுப்புக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்பியவர்களும், கலியாணஞ்செய்துள்ள உண்மையான விவசாயிகளும், எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்தவர்களுமே இந்தக்குடியேற்றதிட்டங்களில் காணிபெற விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

### இருவருடங்களுக்கு முன்னதாக

சட்டப்படி சிங்களமொழி நிர்வாகத்திற்குக் குறிக்கப்பட்டகாலம் 1961-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதியாயிருந்தபோதிலும் சுகாதாரமந்திரி காரியாலயத்தின் கீழுள்ளபகுதிகள் இந்தவருடம் தைமாதத்திலிருந்தே சிங்களமொழியில் அலுவல்களை நடத்தத் தொடங்கியுள்ளன. ஆனால், தொழில் நுட்பம் சம்பந்தமான விஷயங்களில் மட்டும் இந்தப்பகுதிகளுடன் கடிதப்போக்குவரத்துகள் மறு அறிவித்தல் கிடைக்கும்வரை ஆங்கிலத்திலேயே நடைபெற்றுவரும். சுகாதாரசேவைத் தலைவர் இதுவிஷயத்தைச் சகல உத்தியோகஸ்தருக்கும் அறிவித்திருக்கின்றார்.

### அரசாங்கபகுதிகளின் சிங்களமயம்

இவ்வருடமுதல் பதினொரு அரசாங்கபகுதிகள் தங்களிடையே சிங்களத்தில் கடிதப் போக்குவரத்துகள் நடத்தத் தொடங்கியிருக்கின்றன. இவற்றுடன் இதுவரை 107 அரசாங்க பகுதிகள் இந்தச் சிங்களக் கடிதப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. தங்களிடையே சிங்களத்தில் கடிதப்போக்குவரத்துகள் நடத்தத் தொடங்கியிருக்கும் புதிய அரசாங்க பகுதிகளிலே மராமத்து, றெயில்வே, சேர்வே, நீர்ப்பாசன, சுகாதார, பொலிஸ், இலங்கை இராணுவ, கடற்படை, விமானப்படைப் பகுதிகளும், குடியேற்ற—வெளியேற்ற கட்டுப்பாட்டுப் பகுதியும், இந்திய-பாகிஸ்தானிய பிரஜாபகுதியும் அடங்கும்.

### சிகறெற் புகையிலையும் மலையாளப் புகையிலையும்

யாழ்ப்பாணத்திலே இவ்வருடத்தில் சிகறெற்புகையிலைச் செய்கைக்கென்று அரசாங்கம் 800 ஏக்கருக்கு மாத்திரமே அனுமதியளித்தது. ஆனால், இந்த 500 ஏக்கரிலும் அரைப்பங்கு நிலத்தில்தானும் இவ்வருடம் சிகறெற் புகையிலைச்செய்கை நடைபெறுமோ என்பது சந்தேகத்துக் கிடமாயிருக்கிறது. இதற்குக்காரணம், மலையாளப் புகையிலையைச் செய்கைபண்ண மீண்டும்சந்தர்ப்பம் கிடைத்ததிலிருந்து அநேககமக்காரர் மனமாற்றமடைந்து சிகறெற்புகையிலைச் செய்கைக்கென்று பண்படுத்தி வைத்திருந்தநிலத்தில் மலையாளப்புகையிலை செய்கை பண்ணத் தொடங்கியிருப்பதே. ஆயினும் இவர்களின் மனதைமாற்றிக் குறைந்தபட்சம் 450 ஏக்கரிலாவது சிகறெற்புகையிலையைச் செய்கை பண்ணுமாறு அதன்மேற்பார்வையாளர்கள் பிரயத்தனஞ் செய்துவந்தபோதிலும் அவர்களின்சிந்தனை மலையாளப்புகையிலையிலேயே பெரும்பாலும் பதிந்துள்ளது.

### இலவச பல்வைத்தியசாலை

யாழ்ப்பாணநகரிலே பங்ஷால்வீதியில்—அதாவதுகிட்டங்கித்தெருவில் திரு. வி. ரி. பெர்னாண்டோ அவர்களால் அமைக்கப்பட்டுள்ள இலவசபல்வைத்தியசாலை (ஆஸ்பத்திரி) சென்ற11-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை10மணியளவிலே டக்றர்என்சுப்பிரமணியம் அவர்களால் திறந்துவைக்கப் படலாயிற்று. அவ்வேளை அவர்பேசியவிடத்து, இந்தஇலவசபல்வைத்தியவேலை யாழ்ப்பாணமக்களுக்கு ஓர்பெரிய வரப்பிரசாதமாகும்; யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரியிலே நோயாளர்களும், ஏழைமக்களும் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு இந்தவைத்தியசாலை தக்கநிவாரணம் அளிக்குமென நம்புகிறேன்; பல்வைத்தியரான திரு. வி. டி. பெர்னாண்டோ அவர்கள் இந்தஇலவச பல்வைத்தியசாலையைத் திறந்தன் மூலம் மக்களுக்கு மகத்தானசேவை

செய்திருக்கிறோரெனக் கூறலாயினர். யாழ்ப்பாணத்திலே இலவசபல்வைத்தியசாலையொன்று திறக்கப்பட்டிருப்பதால் யாழ்ப்பாணமக்களின் நீண்டகாலதேவைகளில் ஒன்று பூர்த்திசெய்யப்பட்டுவிட்டது. பல்நோயாளிகள் அவதியுறும் இக்காலத்திலே திரு. வி. ரி. பெர்ணண்டோ அவர்கள் இந்தஇலவச பல்வைத்தியசாலையைத் திறந்திருப்பது போற்றத்தகுந்த செயலாகும்; இவர் கருணை மக்களுக்கு நன்குபயன்படுமென்று முதலியார் சி. முத்துத்தம்பி அவர்கள் கூறினார். மேயர் திரு. அல்பிறெட் துரையப்பா அவர்கள் காலஞ்சென்ற திரு. வேதநாயகம் பெர்ணண்டோ அவர்களின் உருவப்படம் ஒன்றைத் திரைநீக்கம் செய்துவைத்தார். மற்றுஞ்சிலர் பேசியபின் திரு. வி. ரி. பெர்ணண்டோ அவர்கள் யாவருக்கும் நன்றிதெரிவித்ததுடன் திறப்புவிழா இனிதேநிறைவாயிற்று.

### தாதிமார் பயிற்சிப் பாடசாலை

யாழ்ப்பாணத்திலே விரைவில்ஆரம்பமாகவிருக்கும்கோர்ஸமார் — அதாவது தாதிமார் பயிற்சிப்பாடசாலைப்பரீட்சை இனிமேல யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும். தாதிமார் பயிற்சிபெற விரும்பிய தமிழ்ப்பரீட்சார்த்திகள் கடந்தகாலத்தில் இப்பரீட்சையைக் கொழும்பிலேயே எடுக்கவேண்டிய நிலைமை இருந்தது. தற்போது புதியபாடசாலையொன்று யாழ்ப்பாணத்திலே திறக்கப்படவிருப்பதால் இதற்குரியபரீட்சையையும் இங்குதானேநடத்தத் தமிழரசுக்கட்சி வேண்டியஏற்பாடுகளைச் செய்துவருகிறது. மேலும்இந்தத் தாதிமார்பயிற்சிப் பாடசாலையின்போதனமொழி தமிழாகவேயிருக்கும். இந்தப் பயிற்சிவகுப்புகளைத் தமிழிலே நடத்தத்தக்கதாய் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் தென்னிந்தியா சென்று அங்கே சுகாதாரமந்திரியையும், மற்றும் அதிகாரிகளையும் கண்டுபேசித் தாதிமார் பயிற்சிவகுப்புகள் தமிழிலே நடைபெறுவதற்குத் தேவைப்படும் சிறந்த ஆசிரியர்களையும், தமிழ்ப் புத்தகங்களையும், மற்றும் உதவிகளையும் பெறுவதற்கான வசதிகளைச் செய்திருக்கின்றார். இந்தப் பயிற்சிப் பாடசாலைப் பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 'கெசற்' அறிவித்தல்மூலம் கோரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கரைச்சி — துணுக்காய்க் காரியாதிகாரி

உள்நாட்டுவிவகாரமந்திரியின் நிரந்தரகாரியதரிசியான திரு. ஷெல்டன் பெர்ணண்டோ நவமாகவகுக்கப்பட்ட கரைச்சி-துணுக்காய் வருமானப்பிரிவுக்குச் சென்றவாரம் விஜயஞ்செய்தபோது ஓர்காரியாதிகாரியின் இடமாற்றத்தை நிறுத்திவிடும்நடவடிக்கையை எடுத்துக்கொண்டார். அவரால் சென்ற புதன்கிழமை புதியகாரியாதிகாரியின் காரியாலயம் திறந்துவைக்கப்படலாயிற்று. இதனைத்தொடர்ந்து நடைபெற்ற பகிரங்ககூட்டத்திலே காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை அவர்கள் வவுனியாவுக்கு இடமாற்றம்செய்யப்பட்டமை நிறுத்திவிடப்படவேண்டுமென்றும், அதனைப்புதியபிரிவு மேலும் சிலவருடங்களுக்கு அவரின்சேவைகளைப் பெறக்கூடியதாயிருக்குமென்றும் பொதுசனங்கள் அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டார்கள். அவரும் அவர்களின் வேண்டுகோளைப்பற்றித் தாம் ஆலோசிப்பதாகத் தெரிவித்தார். பிந்தஅவர் புதியபிரிவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது, ஒவ்வோர்கிராமத்திலும்அதேவிண்ணப்பமேஅவருக்குச்செய்யப்படலாயிற்று. அதனால், பொதுசனங்களின் ஏகமனதான கேள்விக்கிசைந்து திரு. முருகேசம்பிள்ளை அவர்களின் இடமாற்றம் உடனேதானே நிறுத்தப்படவேண்டுமென்று அவர் உத்தரவிடலாயினர்.

## சீனக் கம்யூனிஸ்தரின்
# கொடுங்கோல் ஆட்சி

கட்டாயவேலை, கடும் வரிவிதிப்பு, புதிய கொம்யூன்முறைக் கூட்டுப்பண்ணைமுதலிய கொடுமைகளிலிருந்து தப்புவதன்பொருட்டுச் சீனவிலுள்ள யுனான்மாகாணத்திலிருந்து ஆயிரக்கணக்கில் மலைசாதிமக்கள் பர்மாவுக்குள் ஓடிவருகின்றனர். இவ்வாறு பர்மியப் பத்திரிகைகளிலே சமீபத்தில்வெளியான செய்திகள்கூறுகின்றன. 1958-ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து அகதிகள் வெளியேற்றம் பெரிதும்அதிகரித்துள்ளது. தற்போது மாதம் ஆயிரம் பேருக்குமேல் ஓடிவருவதாக மதிப்பிடப்படுகிறது. ஷா, கச்சின், வாலா முதலிய மலைச்சாதி இனத்தவர்கள் சீனவிலிருந்துவெளியேறி எல்லையோரமாகப் பர்மியபகுதிக்குள்வாழும் தங்கள் இனத்தவர்களுடன் சேர்ந்துகொண்டுள்ளார்கள்.

அரசாங்கசாலைகள், நீர்ப்பாசனதிட்டங்களிலே வலுக்கட்டாயமாக வேலை வாங்குவதற்காக யுனானிலுள்ள கம்யூனிஸ்தஅதிகாரிகள் தங்களைக் கட்டாயப்படையாகத் திரட்டுவதாகப் பர்மாவுக்குத்தப்பிவந்த அகதிகள்கூறுகின்றார்கள். தங்கள் விளைபொருட்களில் பெரும்பகுதியை (முக்கால்பங்குக்குமேல் என்று ஒருவர்கூறினார்) அரசாங்கம் எடுத்துவிட்டதாகவும் அவர்கள் முறையிட்டார்கள்.

மலைச்சாதிமக்களுக்கும், சீனப்போர்வீரர்களுக்குமிடையே பலதடவை கைகலப்புகள் ஏற்பட்டுள்ளன. சீன எல்லைப்படைப் போர்வீரர்களுடன் போராடியபின் பல்வேறுமலைச்சாதி இனங்களையும்சேர்ந்த 2,000 பேர் தப்பிஓடி வந்ததாகப் புரட்டாசிமாதத்திலே தகவல்கிடைத்தது. அதேமாதத்தில் கம்யூனிஸ்தர்களின் வரிக் கொடுமையை எதிர்த்துக் கலகம்செய்தபின் லாலா இனத்தைச்சேர்ந்த மேலும் ஆயிரம் மலைச்சாதியினர் பர்மாவுக்குத்தப்பியோடி வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எல்லையோரமாக வாழும்மக்கள் கொள்ளையடிப்பதற்காகவோ அல்லது உறவினர்களைச் சந்திப்பதற்காகவோ எப்போதும் எல்லையைத்தாண்டிப் போவதும்வருவதும் வழக்கம். ஆனால், அவ்வப்போதுநிகழும் இந்நடமாட்டத்தினின்றும் சமீபத்தியவெளியேற்றம் மாறுபட்டதென ரங்கூன்பத்திரிகைகள் சுட்டிக்காட்டுகின்றன. வெளியேறுவோர்தொகை மிகவும்அதிகம்; பருவமழை பலமாகப்பெய்வதையும் பொருட்படுத்தாது அவர்கள் எல்லையைத்தாண்டி வந்தவண்ணமிருந்தனர். தற்போது வெளியேறுவோர் குடும்பம் குடும்பமாகத் தங்கள்சொத்துச் சுதந்திரங்களுடன் வருகின்றனர். குறிப்பிட்ட ஒருஇனம்முழுவதுமேகூட வெளியேறி வருகிறது. கம்யூனிஸ்தசீனவின் கடும் பந்தோபஸ்து நடவடிக்கைகளையும், பல மலைச்சாதித்தலைவர்களைக் கம்யூனிஸ்த பொலிஸார் கைதுசெய்ததையும் பொருட்படுத்தாது அகதிகள்தொடர்ந்து எல்லைதாண்டி வந்தவண்ணமிருக்கின்றார்கள்.

—(ஂ)—

## முதுமையில் இளமை

வயதுமுதிர்ந்தவர்களை இளமையாக்கும் துறையிலே இப்பொழுது விஞ்ஞானிகள் கவனஞ்செலுத்தி வருகின்றனர். அவர்களின்முயற்சி பூரணவெற்றிபெறவில்லையெனினும் ஓரளவுபலன் அளித்திருக்கிறது. வயதுமுதிர்ந்த ஒருஆணினதோ அல்லது பெண்ணினதோ உடற்சோர்வையும், தளர்ச்சியையும் போக்கித் தென்பூட்ட விஞ்ஞானம் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. சுமார் எழுபதுவருடங்களுக்கு முன் சார்ள்ஸ் பிறவுன் ஸ்குவாட்என்ற ஒருபிரபலவிஞ்ஞானி செம்மறிஆட்டிலிருந்து தயாரிக்கப்படும் ஒருவகைமருந்தை மனிதசருமத்தினுள் செலுத்தினால் அவர்கள் நீண்டகாலம் வாழமுடியுமெனக் கூறினார். ஆனால், மக்கள் அவரை வயதுமுதிர்ந்ததினால் மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டதெனப்பரிகாசம்செய்தனர். ஆனால், அவர்வெளியிட்ட இத்தகவலை ஆதாரமாகக்கொண்டு ருஷ்யவிஞ்ஞானியான சொர்கிவொரனோ தனது ஆராய்ச்சியைத் தொடங்கினர். குரங்கிலிருந்து தயாரிக்கப்படும் மருந்தை மனிதசருமத்தினுள்ஏற்றி ஒருபுதுச் சிகிச்சைமுறையை ஆரம்பித்தார். இச்சிகிச்சைமுறை 1920-ம்ஆண்டு உலகில் பெரும்பரபரப்பை உண்டுபண்ணியது. தற்பொழுது ஏற்பட்டிருக்கும் விஞ்ஞான அபிவிருத்தியை அடிப்படையாக வைத்துப்பார்த்தால் ருஷ்ய விஞ்ஞானியின் சாதனைதானும் அத்துணைபிரமாதமாகத் தோன்றவில்லை. மிருகங்களிலிருந்து உயிருள்ள உறுப்புகளை மனிதஉடலில் பொருத்தும் மாபெரும்சாதனையை சுவிஸ்பேராசிரியர் போல் நீகன்ஸ் செய்துமுடித்தார். இதைக்கண்டுபிடிக்க அவர் 35வருடம் தனிமையிலே ஆராய்ச்சிநடத்தவேண்டியிருந்தது. மரணத்துடன் போராடிக்கொண்டிருந்த 12-ம்பத்திநாதபாப்பானவர் ஐந்துவருடம்நீடித்து வாழ்வதற்குப் பேராசிரியர்போல் நீகன்ஸ்தான் காரணமென்று கூறப்படுகிறது.

### உறுதியான பற்கள்

நூற்றில்ஒருபங்கு விகிதமானோருக்கே உறுதியானபற்கள் இருக்கின்றன. அவர்களின்பற்கள் கெடாமலிருக்கக் காரணம் பற்களை அரிக்கும் கிருமிகளைக் கொல்லும் ஒருவகைத்திராவகம் அவர்கள்வாயில் இருப்பதுதான்என்று டக்டர்கோர்டன் இகிறீன் அவர்கள் அமெரிக்க கிருமிஆராச்சியாளர்களிடம் கூறியிருக்கின்றார். உறுதியான பற்களையுடைய 60பேர்களிடமிருந்து சேகரித்த 15கலன்உமிழ்நீரை ஆராய்ச்சிசெய்து பார்த்ததில் கிருமியைக்கொல்லும் திராவகம் என்னஎன்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்தத்திராவகத்தை மருந்தாகஉற்பத்திசெய்து அத்திராவகம்இல்லாதவர்களுக்குக் கொடுப்பதே இனிஎஞ்சியுள்ள வேலையாகும்.

* * *

● லூர்துபதியின் நூற்றாண்டு விழாக்கொண்டாட்டத்தின் முடிவுதினமாகிய வருகிறமாசிமாதம்18-ந்திகதியன்று அப்பதியில் கூடவிருக்கும் யாத்திரிகர்களுக்குப் பாப்பரசர் வானொலிச்செய்திஒன்று அனுப்பத் திட்டமிடுகிறாரென வத்திக்கான் இராச்சிய மந்திரியாரான கருதினல்தார்டினிஆண்டவர் லூர்துபதியின் நியாஸ்மேற்றிராணியாருக்குத் தெரிவித்திருக்கின்றார்.

● இன்று உலகமுழுவதிலும் பரந்திருக்கின்ற கத்தோலிக்கரின்தொகை 49கோடியே 65லட்சத்து 12,000 பேர். அதாவது, மனிதவர்க்கத்தினரில் நூற்றுக்குப் 18·5 விகிதமானோர் கத்தோலிக்கராய் இருந்துவருகிறார்கள். எஞ்சியவர்களில் பிரிவினைச்சபைக் கிறீஸ்துவர்களும், புறெட்டஸ்தாந்த கிறீஸ்துவர்களும் 12விகிதமும், இந்துக்கள் 12விகிதமும், முஸ்லீம்கள் 15·5 விகிதமும் இருக்கின்றார்கள்.

● வருகிறஆடி மாதம் 1-ந்திகதி ஆரம்பமாகும் தனதுஅரசிறைவருடத்திலே அமெரிக்கஅரசாங்கம் தனது பாதுகாப்புச்செலவுக்கென 4,090 கோடிடலர்செலவிடத்திட்டமிட்டிருக்கிறது. முன்பு திட்டமிடப்பட்டதிலும் செலவிலும் இத்தொகை சற்றேகூடியதாகும். ஜனாதிபதிகூட்டியமகாநாடொன்றில் ஜனநாயக, குடியரசுக்கட்சிகளின் தலைவர்களிடம் இந்தவிபரம்அறிவிக்கப்படலாயிற்று.

## யூதர்களின் ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வகுப்புகளுக்குக் கட்டணம் அறவிடப்படுவதில்லை.

இஸ்ருயேலில் சமயங்களுக்கெனத் தனியொருமந்திரி இருக்கிறார். கிறீஸ்துவசமயத்திற்கும், இஸ்லாம்சமயத்திற்கும் தனித்தனி அரசாங்கபகுதி உண்டு. ஏனைய சமயங்களுக்கும் பூரண உரிமை வழங்கப்பட்டுள்ளது. உலகில் எந்தமூலையிலாவது வசிக்கும் யூதஇனத்தைச்சேர்ந்த எந்த மனிதனும் இஸ்ருயேலில்போய்க் குடியேறலாம் என்று அதன் குடியேற்றச் சட்டம் கூறுகிறது.

18முதல் 29 வயதுவரையுள்ள எல்லா ஆண்களும், 18 முதல் 26 வயதுவரையுள்ள எல்லாப்பெண்களும் (குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் தவிர்த்து) இரண்டு வருடம் இராணுவப்பயிற்சிபெற வேண்டும். இராணுவப்பயிற்சி பெற்ற ஆண்கள்மட்டும் சேமப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இஸ்ருயேல் இராணுவத்தில் அராபியர்பட்டாளங்களும் இருக்கின்றன.

இஸ்ருயேல் ஒரு விவசாயநாடு. எனினும் அந்நாடு தொழில்துறையில் மிகவும்வேகமாக முன்னேறிவருகிறது. நிலக்கரியும், இரும்பும் அங்கே உற்பத்தியாகவில்லை என்பது உண்மையே. ஆயினும் எண்ணெய்க்கும், மின்சாரஉற்பத்திக்கும் குறைவில்லை. ஆகவே, துரிதமாகத் தொழில் முன்னேற்றம் ஏற்படுவது ஆச்சரியமில்லையல்லவா? சிறந்த நீர்ப்பாசன வசதிகள் இருப்பதால் இஸ்ருயேலில் பழவர்க்கங்களும், தானியங்களும் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழில் துறையில் முன்னேறும் நாட்டில்தொழிற்சங்கங்களுக்கும் குறைவிருக்காது. யூததொழிலாளரின் தொழிற்சங்க சம்மேளனம் என்னும் இருதொழிலாளர் ஸ்தாபனங்கள் யூதநாட்டிற் சிறப்பாக இயங்கிவருகின்றன.

ஹய்பாவும், டெல் - அவிவும் பிரதான துறைமுகங்களாகும். லிற்ரு இஸ்ருயேலின் பிரதான விமானநிலையமாகும். மாதந்தோறும் சுமார் 250 விமானங்கள் இந்த விமானநிலயத்துக்கு வந்து போகின்றன. இஸ்ருயேலுக்கும் சொந்தமாக "எலால்" என்னும் விமானப்போக்குவரத்து ஸ்தாபனமொன்று இருக்கிறது. சுருங்கக்கூறின் மேற்கு ஆசியாவிலே இதரநாடுகளைவிட எல்லாத் துறைகளிலும் வேகமாக முன்னேறிவருகிறது சின்னஞ்சிறிய யூதநாடு.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாய மாதாவே, பரலோகபூலோகஇராக்கினியே, பாவிகளின் தஞ்சமே பாவியாய் இருக்கிறநான் பலமுறைகளிலும் உம்மிடத்தில் இரந்து கேட்ட வேண்டுதல்களையாவையும் தப்பாது ஈய்ந்தருளினீர். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்ததற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

அ. தோ.

# அங்கும் இங்கும்

## உங்களுக்குத் தெரியுமா?

### வினுக்கள்

1. முதன்முதலாகப் "பாப்பு" என அழைக்கப்பெற்ற பாப்பானவர் யார்?

2. திருச்சபையின் அதிகம்விருத்தாப்பிய பாப்பானவர் யார்?

3. பாப்புமார்களில் அதிகம்நீண்டகாலம் திருச்சபையை ஆட்சிசெய்தவர்கள் யார்?

4. பாப்புமார்களில் திருச்சபையை அதிகம்குறுகிய காலம் ஆட்சிசெய்த பாப்பானவர் யார்?

5. திருச்சபையை ஆட்சிசெய்த ஒரேயொரு ஆங்கிலேயபாப்பானவர் யார்?

6. ரோமாபுரியைத்தவிர, வேறிடங்களிலும் பாப்புமாரின் தெரிவு நடைபெற்றிருக்கிறதா?

7. வேதசாட்சிகளாகமரித்த பாப்புமார் எத்தனைபேர்?

8. பாப்புமார்களிலே ஆகாயவிமானத்திலும், சப்மறின்களிலும் பிரயாணஞ்செய்த — கரிச்சுரங்கமொன்றில் இறங்கிய — ரெலிவிஷனில் தோற்றிய — ஒரேகருதினல்மார் திருச்சங்கக்கூட்டத்தில் முன்னில்லாத பெருந்தொகையாய் ஒரேதடவையில் 32கருதினல்மாரை ஆக்கிய — அத்துணை பலலட்சக்கணக்கானயாத்திரிகர்களுக்குப் பேட்டியளித்த முதலாவதுபாப்பானர் யார்?

9. உலகில் மிகப்பெரிய மிருகம் எது?

10. சப்தம்செய்துகொள்ள அறிஅறியாத ஒரேயொருமிருகம் யாது?

11. உலகில் மிகவும்உயரமான நீர்வீழ்ச்சி எது?

12. உலகில் அதிகம் புளிப்பான நீரைக்கொண்ட ஆறு எது?

13. ஒருசோடிஎலிகள் பெருகத்தொடங்கினுல் மூன்றுவருடத்திலே அவற்றின்சந்ததி எவ்வளவாகப் பெருகிவிடும்?

14. உலகில் அதிகம்வேகமாகப் பறக்கும்பட்சி யாது?

15. உலகில் அதிகம்சிறிய மீன் எது?

16. புதியபாப்பாசரின் முடிசூட்டு வைபவத்துக்குச் சமுகமளித்திருந்த அரசதம்பதிகள் யார்?

17. அருளப்பர்எனும் நாமத்தைத் தரித்திருந்த கடைசியான பாப்பானவர் யார்?

---

● சமீபத்திலே செய்திகள்பரந்தபோதிலும் லூர்துபதிநூற்றாண்டுவிழா முடிவுக்கொண்டாட்டவைபவங்களுக்குப் பாப்பரசர் சமுகமளிக்கமாட்டாரென வத்திக்கான்வானொலி அறிவித்திருக்கிறது.

● போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன்நகர துறைமுகத்துக்குமேலாக, ராகுஸ்நதியின் தென்கரைப்புறமாகத் 91 அடி உயரமான கிறீஸ்துநாதரின்சுரூபமொன்று நவமாக அமைக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றது. அதனைத்தாங்கிநிற்கும்தூண் 266அடி உயரமானது. இரண்டாவது உலகயுத்தத்திலே போர்த்துக்கால் நடுநிலைமை வகிக்கக் கிடைத்ததற்கு நன்றியாகவே இச்சுரூபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

● அன்று ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியிலே சுதந்திரமேற்கு பேர்லின் நகர பாராளுமன்றத் தேர்தலின்விளைவாகக் கம்யூனிஸ்த அபேட்சகர்கள் எவருமேதெரியப்படாது முற்றாகத் தோற்கடிக்கப்பட்டார்கள். அப்பாராளுமன்றத்திலே ஓர்பிரதிநிதியை அவர்கள்கொண்டிருக்க வேண்டுமானுல் நூற்றுக்கு 5 விகிதமானவாக்குகளைப் பெறவேண்டும் ஆனுல், 1.9 சதவிகிதமான வாக்குகளையே அவர்கள்பெற்றுர்கள்.

### சமஷ்டிஆட்சியிலேயே முடியும்

"இதுவரை கண்டிப்பகுதி அபிவிருத்தியடைந்ததாகக் காணவில்லை. நூறு ஆண்டுகள்சென்றுலும் கண்டிப்பகுதி அபிவிருத்திசெய்யப்படுமெனக் கூறமுடியாது. நகரதொழிலாளரின் சம்பளத்தை உயர்த்துவதற்காக எத்தனையோசெய்கின்றுர்கள். ஆனுல், கண்டியமக்களைப் பார்ப்பாரில்லை. இதுதான் கண்டியமக்களின்நிலை. இவர்கள் உய்யவேண்டின் தாங்கள்கொடுக்கும் வரிப்பணத்தின் செலவுபற்றிய அதிகாரம்பெறவேண்டும். இது சமஷ்டி ஆட்சியிலேயே முடியும்."

திரு. ஆர். ஈ. ஜயதிலக,
நாவலப்பிட்டி எம். பி.

### தமிழர்கட்கு ஒருசெய்தி

"சிங்களம்மட்டும்சட்டம் தமிழர்களின்மொழியைக் கொல்லநினைத்தது. போக்குவரத்துமந்திரியின் சிங்களஸ்ரீ தமிழரின்மானத்தைச் சிதைக்கஎண்ணியது. இந்தத்தமிழர்கள் இனிமேல் அரசியல்துறையில் கொலைசெய்யப்படுவார்கள். தமிழர்கட்கு ஒருசெய்தி விடுக்கவிரும்புகிறேன். தென்னிலங்கையிலே வருங்காலத்தில் வாழலாமென்ற எண்ணத்தைவிடுத்து இலங்கைத்தமிழர்கள் தங்கள்பகுதிகட்குத் திரும்பவேண்டும். அந்நியர்களை வெளியேற்றிவிட்டு, அப்பகுதிகளை வளமாக்கப் பாடுபடவேண்டும். மானத்தோடு வாழ்வதற்காகச் சுதந்திரஈழத்தை அமைப்போம் வாருங்கள்"

திரு. சி. சுந்தரலிங்கம்,
வவுனியா எம். பி.

### நிலைமை நீடிக்குமானுல்!

"சமீபத்திலே நடந்தவைகள் யாவும் இலங்கை சர்வாதிகாரத்தை நோக்கிக் கொண்டுபோவதை நிரூபிக்கின்றன. இம்மட்டன்று, கம்யூனிஸ்தர்களின் செல்வாக்கும் பெருகிக்கொண்டு வருகிறது. இந்தநிலைமை நீடிக்குமானுல் நாட்டின்ஐக்கியம் குலைந்து, நாங்கள் பேணிவந்தசமயம், கலாசாரம்யாவும் அழிந்துபோய்விடும் நான் சபாநாயகராய் இருந்தபொழுது சுயேச்சையுடன் கடமையாற்றினேன். ஆனுல், இப்பொழுது இந்தஅரசாங்கத்தின் ஆட்சியின்கீழ் நாடுபோய்க்கொண்டிருக்கும் நிலைமையைக்கண்டு பொறுக்கமுடியாது யு. என். பி. கட்சியில்சேர்ந்துகொண்டேன். ஊழல்மலிந்துகிடக்கும் இந்தஅரசாங்கத்தைத் தோற்கடிப்பதே எனது நோக்கமாகும்."

சேர் அல்பேட் பீரிஸ்,
பாராளுமன்ற முன்னைநாள் சபாநாயகர்

### கல்விமந்திரியும் முஸ்லீம்களும்

"முஸ்லீம்மக்களின் தந்தை" யென்று தன்னைத்தானே கூறிக்கொண்டு கல்விமந்திரி திரு. விஜயானந்தா தஹநாயகா சிலவாரங்களாக முஸ்லீம்மக்களை அவநம்பிக்கையுடன் நோக்க ஆரம்பித்திருப்பதாக அரசியல் வட்டாரத்தில் பேச்சுஅடிபடுகின்றதாம். திரு. தஹநாயகாவின் அவநம்பிக்கைக்குக்காரணம், காலித்தொகுதியில் அடுத்ததேர்தலின்போது ஒருபிரபல முஸ்லீம்தலைவர் ஐ. தே. கட்சிஅங்கத்தவராகப் போட்டியிட முடிவுசெய்தமையே. காலியிலுள்ள முஸ்லீம்மக்களின் ஆதரவுடன் சீவியகாலம் வரையும் பாராளுமன்றஅங்கத்தவராகத் தான்இருக்கமுடியுமென்று கனவுகண்டுகொண்டிருந்த கல்விமந்திரிக்கு இப்புதியநிலைமை ஒருபெரியதலையிடியைக் கொடுத்துள்ளதாம். காலிமுஸ்லீம்களின் ஆதரவுடனும், ஐ. தே. கட்சியைச்சேர்ந்த சிங்களமக்களின் ஆதரவுடனும் அந்தமுஸ்லீம்தலைவர் நிச்சயமாகத் திரு. தஹநாயகாவைத் தோற்கடித்துவிடமுடியுமாம்."

ஒ. வா. 'தினகரன்'

### நேருக்குநேர் மோதுகை

"களனி மகாவிகாரை மடாதிபதியான புத்தரக்கித்த தேரோ எம். ஈ. பி. உடன் நேருக்குநேர் மோதிக்கொண்டிருக்கிறுராம். சமீபத்திலே நடைபெறவிருக்கும் களனிப்பெரகாரைக்கு அவர் யு. என். பி. காரர்களுக்கு முதலிடம்கொடுத்திருப்பதுதான் இந்தமோதலுக்குக் காரணமென விஷயமறிந்த பேச்சுகள் எழுகின்ற பாராளுமன்ற சதுக்கச்செய்தியொன்று கூறுகின்றது. கலவரங்களிலே தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட சிறிசோம, இரணசிங்க, அல்கும ஆகியவர்களுக்கும் களனிப் பெரகாரையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்."

வா—டி 'வீரகேசரி'

### அநியாயம் நீடிக்கப்போவதில்லை

"பிரதமர்பண்டாரநாயகாவின் புதுவருடச்செய்தியைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத்தான்வந்தது. தாங்கள் பதவிக்குவந்த நாளிலிருந்து அதிகம் தொல்லைகளாம். அதனுல் தங்களுக்கு ஒன்றுஞ்செய்ய முடியவில்லையாம். நான் கூறவிரும்புகிறேன். இந்தஅரசாங்கத்தின் கோழைத்தனத்தால் — கொள்கையற்றதன்மையால்— நேர்மையற்றபோக்கினுல் நாட்டிற்கே கேடுவிளைந்தது. இந்தஅநியாயம் அதிகநாட்களுக்கு நீடிக்கப்போவதில்லை. காலம்வரும், காத்திருங்கள். மாற்றம் காண்போம். புதுவாழ்வுகாண வழி கிடைக்கும். தயங்கவேண்டாம்."

திரு. டட்லி சேனநாயகா
முன்னைநாள்பிரதமர்

### ஐக்கியஇலங்கை எப்போது?

"பிரதமரின் அலங்காரவார்த்தைகளுக்குத் தமிழினம் பலியாகியகாலம் மலையேறிவிட்டது. தமிழ்மொழியின் நியாயமான அந்தஸ்துகளும், உரிமைகளும்கூடப் புறக்கணிக்கப்பட்டுள்ள இந்தநேரத்தில் அடிப்படைஉரிமை, நியாயமான அந்தஸ்து, உரிய இடம் என்பனபோன்ற பசப்புவார்த்தைகளால் ஒருஐக்கியஇலங்கை உருவாகுமென ஆட்சியாளர்கருதுகின்றனர். என்று தமிழ்மொழிக்கும், சிங்களமொழிக்கும் சமஅந்தஸ்துக்கிடைத்து, இருமொழிகளும் ஆட்சியாளரால் சமமாக நோக்கப்படுகின்றனவோ அன்றுதான்உண்மையில் ஓர்ஐக்கிய இலங்கை உருவாகமுடியும்."

திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு எம். பி.

### மந்திரிசபையும் உணவுமந்திரியும்

"மந்திரிசபையிலிருந்து வெளியேறக்கூடிய ஓர்கட்டத்துக்கு உணவுமந்திரி திரு. பிலிப் குணவர்த்தன வந்திருக்கிறுர். மந்திரிசபையிலுள்ள வலதுசாரிக்கோஷ்டிக்கும், அவருக்குமிடையே நடந்தபோராட்டத்தில் அவர் தோல்வியடைந்துவிட்டார். பிலிப்பை வெளியேற்றுவிட்டால் தாங்கள் மந்திரிசபையைவிட்டு வெளியேறப்போவதாக வலதுசாரிக்கோஷ்டி பிரதமரைப்பயமுறுத்துவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. நிலைமைஇன்று மிகப்பயங்கரமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஒன்றின்கழுத்தை நெரிப்பதற்கு மற்றொன்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கும் ஓர்கட்டத்தில் மந்திரிசபை இருகோஷ்டிகளாகப் பிளவுபட்டிருக்கிறது. இந்தநிலைமையில் மக்கள்விரும்பினுல்கூடப் பிரதமரால்கூட ஆட்சிநடத்தமுடியாது. ஒருபெரிய பிரச்சினையைத்தீர்ப்பதில் ஒரு மந்திரியாவது பிரதமருக்குஉதவிசெய்யக் கூடியவராக இருக்கவில்லை."

டக்றர் என். எம். பெரேரு,
எதிர்க்கட்சித்தலைவர்.

## உங்களுக்குத் தெரியுமா?

### விடைகள்

1. 399-ம் ஆண்டு மரணமடைந்த அர்ச். சிறிசியுஸ்பாப்பானவரே.

2. அர்ச். அகாத்தோ பாப்பானவரே. இவர் ஒருகிரேக்கர். பாப்பானவராக இவர் தெரியப்பெற்றபோது 103 வயதுடையவராய் இருந்தாரென்று சொல்லப்படுகிறது. 681-ம் ஆண்டு இவர்மரித்தபோது 106வயதுடையவராய் இருந்தார்.

3. அர்ச். இராயப்பரே. இவர் அதிகம்நீடியகாலமாக 34வருடம் திருச்சபையை ஆட்சிசெய்தார்.

4. 2-வது ஸ்ரீபின் பாப்பானவரே. இவர் 754-ம்ஆண்டு நான்குதினங்கள் மாத்திரமே பாப்பானவராயிருந்தார். முடிசூட்டப்படுமுன்னரே இவர்மரணமடைந்தார்.

5. நிக்கலஸ் பிறேக்ஸ்பியர்என அறியப்பட்டிருந்த 4-வது அதிரியான் பாப்பானவரே. இவர் 1154-ம்ஆண்டுமுதல் 1159-ம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்தார்.

6. ஆம், வெனிஸ், பெறூஜியா, கொன்ஸ்ரான்ஸ், அவிஞ்ஞோன்முதலாம் 20இடங்களிலும் பாப்புமாரின் தெரிவு நடைபெற்றிருக்கிறது.

7. 33பேர்.

8. சமீபத்தில் காலஞ்சென்ற 12-ம் பத்திநாத பாப்பானவரே.

9. நீலத்திமிங்கலமே.

10. ஒட்டைச்சிவிங்கியே.

11. வெனெசுவேலாவிலுள்ள ஆஞ்ஜெல் நீர்வீழ்ச்சியே.

12. கலம்பியாநாட்டிலுள்ள வினிகர்ஆறுதான். இந்தஆற்றுநீர் அதிகம் புளிப்பாய் இருப்பதால அதில்மீன்கள் வாழ்வதில்லை.

13. 50கோடி எலிகளைக்கொண்ட ஓர்குடும்பமாகப் பெருகிவிடும்.

14. சுவிவ்ற்என்பதே. இது மணிஒன்றுக்கு 200மைல்வேகமாகப்பறந்து செல்லக்கூடியது.

15. பிலிப்பைன்ஸ்தீவுகளைச்சேர்ந்த லூஸின்தீவுக்கடலிலுள்ள சிமாறப்பன் எனும் மீனே. இது அரைக்கிறேயின் தான் நிறையுள்ளது.

16. தென்மார்க்குதேச பிறெடெறிக் அரசரும், இங்கிறிட் இராணியாருமே. முடிசூட்டுவைபவத்துக்கென்று ரோமாபுரிக்கு அதிகம்காலநேரத்துடன் வந்திருந்தவர்கள் இவர்கள்தான்.

17. 1316-ம்ஆண்டு லியன்ஸ்நகரிலே பாப்பானவராகத் தெரிவுசெய்யப்பட்டுத் 90-ம்வயதுவரையிலே சீவித்திருந்த ஓர்பிரான்ஸியரே. இவர்தான் 22-ம் அருளப்பபாப்பானவர். இவர் ஓர்டக்றர். பாப்பானவரென்றும், நியாயவாதியான பாப்பானவரென்றும் அறியப்பெற்றிருந்தார்.

---

● பாப்புமார்களிலே "பெரிய" என்ற கண்ணியப்பெயர் வழங்கப்பெற்றவர்களாய் மூவரே இருக்கின்றனர். 1-வது அர்ச். பெரியசிங்கராயர், 1-வது அர்ச். பெரியகிறகோரியார், 1-வது அர்ச். பெரியநிக்கலஸ் என்பவர்களே அம்மூவருமாவர். அடுத்தபடியாகச் சமீபத்தில்காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பானவரே 'பெரிய'என்ற மகிமைப்பதவியைப் பெறுவாரெனப் பலருங்கருதுகிறுர்கள்.

● நாம்சஞ்சரிக்கும்உலகம் ஐந்து கண்டங்களையும், ஒருலட்சம்தீவுகளையும் கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் சுமார் 200நாடுகளாகவும், வெற்றிகொண்டு ஆட்சிஉரிமைபெற்ற நாடுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகளிலெல்லாம் வசிக்கின்ற 270 கோடிமக்களும் ஆயிரத்துக்குமேற்பட்டபாஷைகளைப் பேசுகின்றுர்கள். பல்வேறுபட்ட சுமார் 500 சமயங்களைச் சேர்ந்திருக்கின்றுர்கள்.



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

சென்ற ஞாயிற்றுக்கிழமை நாங்கள் திருக்குடும்பத்தின் திருநாளைக் கொண்டாடினேம். அன்று வாசித்த சுவிசேஷத்தை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதிலே 12 வயதுள்ள யேசுவைப்பற்றி, "அவர் அவர்களோடு புறப்பட்டு நசரேத்து ஊருக்கு வந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சகலத்தையும் படைத்த சர்வ வல்லப கடவுள் தமது மாதாவுக்கும், அர்ச். சூசையப்பருக்கும் "கீழ்ப்படிந்திருந்தார்" என்று அறியும் பொழுது நீங்கள் ஆச்சரியப்படவில்லையா? பிள்ளைகளாகிய உங்களுக்கு முன்மாதிரிகை காட்ட வேண்டும் என்றுதான் அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தார்.

கீழ்ப்படிதல் ஒரு மகத்தான செயல். அதுதான் அமைச்சல் என்னும் புண்ணியம். எல்லாப் புண்ணியங்களினதும் முடி அது. பிள்ளையாகிய யேசு அமைந்து நடந்தது போல நீங்களும் உங்கள் தாய்தந்தையருக்கு அமைந்து நடவுங்கள். நீங்கள்தான் குடும்பத்தின் ஒளி. உங்களை அருமைப்படுத்துவது இந்தப் புண்ணியந்தான். நீங்கள் அமைச்சல் உள்ளவர்களாய் இருந்தால் உங்கள் பெற்றோருக்கும், யேசுவுக்கும் அருமையான பிள்ளைகளாவீர்கள்.

அரிய சகோதரங்களே! இந்தக் காலத்திலே அமைச்சல் என்னும் புண்ணியம் குறைந்துவருகிறது. பிசாசு செய்யும் வேலை இது. உங்களையும் பிசாசு சோதிக்கும். பெற்றோருடைய சொல்வழிகளைத் தட்டி நடக்கும்படி தூண்டும். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயருடைய சொல்லை மீறி நடக்கச் சொல்லும். கவனமாயிருங்கள். பிசாசுக்கு இடம் கொடாதீர்கள். யேசுவின் முன்மாதிரிகையின்படி நீங்களும் அமைந்து நடவுங்கள். அப்படி நடந்துவந்தால் நீங்கள் யாவற்றிலும் வெற்றிபெறுவீகள்.

அண்ணு.

—*—

## இரக்கத்தின் காலம்

கொயின் சுவாமியாருடன் இரு பையன்கள் சென்றுகொண்டிருந்தனர். எங்கே போகிருர்கள்? சுவாமியாரின் படுக்கையறையுள் நுழைந்தனர். அங்கே சுவாமியாருடைய மேசையின்மேல் சில வெள்ளிக்கிண்ணங்களும், வெற்றிச்சின்னங்களும் வைக்கப்பட்டிருந்தன. சுவாமியார் அவைகளைக் காட்டி, "தம்பிமாரே! இவற்றை நன்ருய்ப் பாருங்கள். எப்படி இவைகள் எனக்குக் கிடைத்ததென்று தெரியுமா? எனது பாடசாலைக்காலத்தில் நடைபெற்ற குத்துச்சண்டை, உதை பந்தாட்டம், மல்யுத்தம் என்பவற்றில் நான் காட்டிய திறமைகளின் ஞாபகங்களே இவைகள்" என்ருர் சுவாமியார்.

அவற்றைக் கவனித்த பீற்றர் என்னும் பையன் அதிசயத்துடன் ஒரு மனித சிலையின் சின்னத்தைப் பார்த்து: "ஓ! மனிதன்!" என்று விழித்தான். அதைக்கண்ட இராஜா என்னும் மறுபையன் "இவைகள் எனக்குக் கிடைத்திருந்தால் நான் எவ்வளவு அழகாக மினுக்கி வைத்திருப்பேன்" என்ருன். அதற்குச் சுவாமியார்: "அன்ெருருநாள் இவைகளை நான் வெளியே எறிந்துவிட்டேன்" என்ருர். "எதற்காக வெளியே எறிந்தீர்கள்?" என்ருன் பீற்றர். "இவைகளைப் பார்க்கும்போது நான் பெருமைகொள்ளுகிறேன். இவைகளைவிட உயரிய நோக்கங்களும் மனதில் உதிக்கின்றன" என்ருர் சுவாமியார்.

"அந்த நோக்கங்கள் என்ன?" என்ருர் இராஜா. அதற்குச் சுவாமியார் சொல்லுவார்: "தம்பிமாரே! இந்த வெற்றிச்சின்னங்கள், நாம் எல்லாரும் தேடி அடையவேண்டிய ஒரு பெரிய வெற்றியை ஞாபகப்படுத்துகின்றன. இந்த அழிவுக்குரிய சின்னங்களைப் பெறுவதற்கு நான் எவ்வளவு கஷ்டங்களை மேற்கொண்டேனே, அதிலும் பன்மடங்கு முயற்சித்தால்தான் மோட்சத்தை நாம் அடையமுடியும்" என்ருர். "ஆமாம். நாங்கள் இதுவரை இதைப்பற்றி யோசிக்கவேயில்லை" என்றனர் இருவரும்.

எங்கள் சீவியகாலத்தில் நாம் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்கும், செய்யாமல்விட்ட நன்மைகளுக்கும் தேவனுடைய இரக்கம் எமக்கு எவ்வளவு அவசியம் என்பதையும், என் கடைசித் தீர்வைநேரத்தையும் நான் எப்போதும் நினைக்கிறேன். அந்த நேரம் எமக்குத் தேவ இரக்கம் வேணுமானுல் நாம் செய்யவேண்டியது ஒரே காரியம். அதாவது, கிறீஸ்துநாதர் செய்ததுபோல, ஏழைகள், வியாதிஸ்தர், கைவிடப்பட்டவர்கள்மேல் நாம் இரங்கி அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். இன்னும் பாவிகள்மட்டிலும், எங்களை மனவருத்தப்படுத்துகிறவர்கள் மட்டிலும் நாம் இரக்கம்காட்டவேண்டும். அப்படி நடந்தோமானுல் நாம் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை. கடைசிநேரம் வரும்போது "என் பிதாவினுல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! வாருங்கள். உங்களுக்கென ஆயத்தம்பண்ணப்பட்ட மோட்ச இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்ற வாக்கியத்தைக் கேட்கும் பாக்கியம் பெறுவோம்.

---

### அதிசய கிறகோரியார்

ஒரு வாவியைப்பற்றி இரு சகோதரர்க்கிடையில் தர்க்கம் நடைபெற்றது. இவர்களைச் சமாதானப்படுத்தக் கிறகோரி மேற்றிராணி ஆண்டவர் முயன்ருர். ஆனுல், அவரது புத்திமதிகளெல்லாம் வீணுயின. நாளைக்கு இந்த இடத்திலே இருவரும் சண்டைசெய்து முடிவு எடுக்கவேண்டுமென்று சொல்லிப் போயினர்.

ஆனுல், மேற்றிராணி ஆண்டவர் நம்பிக்கை இழக்கவில்லை. அவர்கள் சண்டைசெய்வதாகச் சபதம்கூறிய அதே இடத்திலேயே இரவு முழுவதும் மேற்றிராணியார் செபஞ் செய்துகொண்டிருந்தார். அடுத்த நாள் அவர்கள் இருவரும் சண்டைசெய்யும் நோக்கத்துடன் அவ்விடத்துக்கு வந்தார்கள். என்ன அதிசயம்! வாவிமுழுவதும் வற்றிக்காய்ந்து வறண்டுபோயிருந்தது.

ஆண்டவர் தமது தாசனின்செபங்களை இவ்வாறு கேட்டு அநேக அதிசயங்களைச் செய்துவந்தார். பேய்களைத் துரத்தினுர். நோயாளிகளைச் சௌக்கியப்படுத்தினுர். வேதகலாபனைக்காலத்தில் பலஸ்தீனுவில் இருந்த சனங்களை ஆசீர்வதித்துத் திடப்படுத்தினுர். தமது மேற்றிராசனத்து விசுவாசிகளுக்கு எண்ணிறந்த நன்மைகள்செய்து அர்ச்சியசிஷ்டராய்க் காலஞ்சென்ருர். கார்த்திகை மாதம் 17-ம் திகதி திருச்சபை இவரது திருநாளைக் கொண்டாடுகிறது.

## நற்கருணையைக் காத்த வீரன்

முன்ெனுருகாலத்தில் ரோமானிய அரசர்கள் திருச்சபையை அழிக்க முயற்சித்தபோது கிறீஸ்தவர்கள் நிலவறைகளில் மறைந்து வசிக்க வேண்டி இருந்தது. அப்படியான நிலவறை ஒன்றிலேதான் பின்வரும் சம்பவம் நடைபெற ஆரம்பித்தது. ஒருகுருவானவர் நிலவறையில் திவ்வியபூசை சொல்லிமுடித்துத் தமது கிறீஸ்துவமக்களின் மத்தியில் வந்து உட்கார்ந்தார். அவர்களுக்குள் தார்சிசியஸ் என்னும் சிறுபையன் ஒருவன் இருந்தான்.

குருவானவர்: "என்அருமையான பிள்ளைகளே! உங்கள் சிநேகிதன் பவுலஸ் ரோமானிய வீரராற் சிறையாக்கப்பட்ட சம்பவம் உங்களுக்குத் தெரியுமல்லவா? அவனுக்கு நாளைக்கு மரணத்தீர்வைஎன அறிந்தேன். ஆதலால், நான் அவனுக்குத் தேவ நற்கருணை கொண்டு மறியற் கூடத்துக்குப் போகவேண்டும். நான் திரும்பி வராவிட்டால் நீங்கள் உங்கள் பக்திஅனுசாரங்களைத் தொடர்ந்து செய்யுங்கள். தேவநேசம், பிறர்நேசமுள்ளவர்களாயிருங்கள். நல்ல தேவனிடம் பக்தியாய் மன்றுடுங்கள். அவர் உங்களை ஆண்டு நடத்துவாராக!"

1-ம் ஆள்: "சுவாமி! அங்கு நீங்கள் போக முடியாது; உங்களைப் போர்வீரர் கண்டு பிடித்து விடுவார்கள்."

குருவானவர்: "நான் பலதடவைகளில் மறியற்கூடத்துக்குப் போயிருக்கிறேன்."

2-ம் ஆள்: "சுவாமி! இப்போ போர்வீரர் மெத்தக் கவனமாயிருக்கிருர்கள். உங்களை அவர்கள் கொலைசெய்தால் பூசைப்பலிஒப்புக்கொடுப்பது யார்? நான் போய்வரட்டுமா?"

குருவானவர்: "உங்களை அவர்கள் கிறீஸ்தவர்கள் என்று கண்டுபிடிப்பார்கள். வீணுக எங்களைப் பிடிபட விடப்படாது. ஆனுல், நற்கருணையை அவமதிப்பதில் அவர்களுக்கு அதிகம் சந்தோஷம். துணிந்து போகக்கூடிய எங்கள் வீரன் குவாட்றேற்சசைத் தேடினேன். அவரைச் சந்திக்க முடியவில்லை. அவரை ஒருவரும் சந்தேகிக்க மாட்டார்கள்."

தார்சிசியஸ்: "சுவாமி! என்னை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். நான் இலேசாக மறியற்கூடத்துக்குப் போய்வரலாம். நான் போகட்டுமா?"

குருவானவர்: "நீ மிகவும் சின்னப்பையன். இந்த ஆபத்தான காலத்தில் உன்னை எப்படி அனுப்பலாம்?"

தார்சிசியஸ்: "சுவாமி! சிறுவனுயிருப்பதுதானே நல்ல வழி. ஒருவரும் கவனிக்கமாட்டார்கள்."

2-ம் ஆள்: ஆம் சுவாமி! அவன் சொல்வது சரி. சிறுவனுய் இருப்பதால் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். அவன் போகட்டும்."

குருவானவர்: "ஆனுல், எனக்கு ... எனக்குத் தெரியாது."

தார்சிசியஸ்: "சுவாமி! நான் மெத்தக் கவனமாக மறியற் கூடத்துக்கு நற்கருணை கொண்டு போவேன்."

குரு.: "திவ்விய நற்கருணையின் மகத்துவத்தை நீ விளங்குவாயா?"

தார்சிசியஸ்: ஆம்சுவாமி! எனக்குத் தெரியும். நான் செய்வேன். யேசுவுக்காகச் சீவிப்பதே என் சந்தோஷம்."

[குருவானவர் நற்கருணையை ஒரு தூய வெண் துகிலில் சுற்றினுர். தார்சிசியஸ் முழந்தாளிட்டான். அவன் மேற்போர்வைக்குள் அதனை மறைத்து வைத்தார் குருவானவர்.]

குருவானவர்: "என் மகனே! தேவன் உன்னுடன் இருப்பாராக!"

தார்சிசியஸ்: "உண்மையாகவே அவர் இப்போது என்னுடன் இருக்கிருர்."

[வீதியோரமாயுள்ள ஒரு திறந்த முற்றவெளியில் சிறுபையன்கள் பந்தடித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள்.]

1-ம் பையன்: மார்க்ஸ் எங்கே?

2-ம் பையன்: அவன் இன்னும் ஆஸ்பத்திரியிலேயே இருக்கிருன்.

3-ம் பையன்: அவனை விட்டுவிட்டு விளையாட்டைத் தொடங்குவோம்.

4-ம் பையன்: ஒருவன் இல்லாமல் எப்படி நாம் விளையாடமுடியும்? பொறுங்கள். அதோ ஒரு பையன் வருகிருன். கூப்பிடுவோம்.

1-ம் பையன்: தார்சிசியஸ் வருகிருன். அவன் சிறு பையன் என்ருலும் சேர்த்து விளையாடுவோம்.

2-ம் பையன்: கெதியாய் வாரும் தார்சிசியஸ். மார்க்கசுக்காக உம்மைச் சேர்த்து விளையாடப் போகிருேம்.

தார்சிசியஸ்: சிநேகிதரே! அது முடியாது. நான் ஒரு அவசரமான அலுவலாகப் போகிறேன். என்னை மன்னியுங்கள்.

1-ம் பையன்: தார்சிசியஸ்! உன் அலுவலைப் பிறகு பார்க்கலாம். இப்போ விளையாடவா; தெரிகிறதா?

தார்சிசியஸ்: முடியாது. நான் அவசியம் போகவேண்டும்.

3-ம் பையன்: அந்த அவசிய வேலை என்ன? பிரபுவைக் காணப் போகிருயா?

4-ம் பையன்: என்ன தார்சிசியஸ்! அதை எங்களுக்குச் சொல்லக் கூடாதா? சிநேகிதர்களே! அங்கே பாருங்கள். ஏதோ மறைத்துக் கொண்டு போகிருன்.

1-ம் பையன்: இதற்குள் என்ன வைத்திருக்கிருய்? மறியற் கூடத்திலிருக்கும் கிறீஸ்தவர்களுக்கு ஏதும் கொண்டு போகிருயோ?

[ பாலர்பக்கத் தொடர்ச்சி ]

2-ம் பையன்: வாருங்கள். இவனைப் பிடியுங்கள். என்ன வைத்திருக்கிறான் பார்ப்போம்.

[எல்லோரும் அவன்மேல் கல்லுகளை எறிந்து விழுத்திப் பறித்தார்கள். சடுதியாக ஒரு போர்வீரன் வந்து அவனைத் தூக்க, எல்லோரும் ஓடிவிட்டார்கள்.]

போர்வீரன்: "தார்சீசியஸ்! என்ன சம்பவித்தது? நான் பிந்திவிட்டேனே?"

தார்சீசியஸ்: "குவாட்றேற்றஸ்! என்னுடன் இருக்கும் நற்கருணையைப் பாதுகாரும். நான் யேசுநாதரைக் கொண்டுவந்தேன். அவரைக் கவனமாக எடும்."

[தார்சீசியஸின் தலை சரிந்தது. கண்கள் மூடப்பட்டன. குவாட்றேற்றஸ் பக்கத்தில் முழந்தாளிட்டான். சற்றுநேரம் மௌனம் நிலவியது. பின் மெதுவான குரலில் சொல்லுவான்.]

குவாட்றேற்றஸ்: "தார்சீசியஸ்! நான் நற்கருணையைப் பாதுகாப்பேன். உன்னை அந்த நல்ல தேவன் காப்பாராக."

அநேக வருடங்களுக்குமுன் தார்சீசியஸ் யேசுநாதரைக் கொண்டு ரோமாபுரிப் பட்டணத்து வீதியால் போனபோது நடந்த சம்பவம் இது. இவரைப்போல் எத்தனையோ கிறிஸ்துவர்கள் வேதத்துக்காக உயிரைக் கொடுத்தார்கள். ஆனால், தார்சீசியஸ் ஒரு விசேஷ விதமான வேதசாட்சித் தனமடைந்தார். திவ்விய நற்கருணையைக் காப்பதற்காகத் தன் உயிரைக் கொடுத்தார். இவரை எப்போதும் திருச்சபை ஆவணி 15-ந் திகதி ஞாபகப்படுத்தித் திருநாட் கொண்டாடுகிறது. "இவர் நற்கருணையைப் பாதுகாத்த வீரன்" என அழைக்கப்படுகிறார்.

பிள்ளைகளே! உங்கள் உள்ளத்திலிருக்கும் யேசுநாதரை எப்படிப் பாதுகாத்து வருகிறீர்கள்?

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**எங்கள் பாடசாலைகள்:**

எமதுபங்கிலுள்ள கிளென்னி ஆண், பெண்பாடசாலைகள் தங்கள்விடுமுறை காலத்தைக்கழித்துச் சென்ற 5-1-59 திங்கள்வாரம்திரும்பவும்ஆரம்பமாயின. அன்றுகாலை 8-30 மணியளவில் இரு பாடசாலைகளையுஞ்சேர்ந்தஆசிரியர்கள், மாணவர்மாணவிகள்பங்குத்தேவாலயத்தில் ஒன்றுகூடினர். கட்டளைக்குரவரும், முகாலமைக்காரருமாகிய வண. ஜி. ஈ. எல். வம்பேச்சுவாமிகளால் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. ஆசீர்வாதத்தின்போது "வேனிக்கிறேயாத்தோர்" என்னும்கீதத்தைப்பாடித் தூய ஆவியானவரின்உதவியை யாவரும்வேண்டிக்கொண்டனர். அதன்மேல் கட்டளைக்குரவர் பாடசாலையினர்க்கு நன்மொழிகள் சில கூறிக் கிளென்னி ஆண்கள்கழகம் புதுவருட ஆரம்பத்தோடு "சிரேஷ்ட"பாடசாலையாகக் கல்விப்பகுதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற சுபசெய்தியை அறிவித்தார். இச்சுபசெய்தியானது இருபாடசாலைகளினதும் ஆசிரியர்கள், மாணவர்மாணவிகளுக்கும், பெற்றோர்க்கும் பெருமகிழ்வை அளித்தது. இவ்வசதியினை ஆக்கி எமது மாணவர்மாணவிகளுக்கேற்ற கல்வியறிவூட்ட இப்பங்கிலேயே இடம்பெற்றுத்தந்த எமதுகட்டளைக் குரவரவர்கட்கு எல்லோர்சார்பிலும் நன்றிதெரிவித்துக் கொள்ளுகின்றோம். — நிருபர்

## பிரிவுஉபசார விழா

அன்றுவெள்ளிவாரம் நாள்ளுநுட்டிக்குடியிருப்புப் பாடசாலைமாணவர்கட்கும், பெற்றோருக்கும் கவலைநிறைந்த ஓர்தினமாகும் அவர்களது முகவாட்டமே அவர்களின் மனக்கவலையை வெளிக்காட்டியது. கடந்தநான்கு ஆண்டுகளாக எங்கள்பாடசாலையில் ஆங்கிலஆசிரியையாக நற்பணியாற்றிவந்த செல்வி மாசில்லா பேதுருப்பிள்ளை வேறுபாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளாரென்றசெய்தியே இத்தக்கவலைக்கெல்லாம் காரணமாகும்.

ஆசிரியைஅவர்களின் அளப்பரும் சேவைகளுக்கு நன்றி தெரிவிப்பான் வேண்டி 4மணிக்குச் சாதிசமயபேதமின்றி ஆடவரும், மகளிரும், பிள்ளைகளுமாகப் பெருந்திரளானோர் பாடசாலைமுன்றிலில் குழுமினார்கள். ஆசிரியை ஆடம்பரமாக அழைத்துச்செல்லப்பட்டு உயர்மேடையில் அமர்த்தப்பெறவே அவருக்குமலர்மாலைகள் அணியப்பட்டன.

ஆசிரியையின் குணாலங்களை வியந்து மாணவர்களால் பாடப்பெற்ற பாக்களினிடையே சக்கிறிஸ்தாம் திரு. சீ. சவிரி அவர்கள் பிரிவுஉபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தார். அன்பளிப்புகள் மாணவர்களாலும், பெற்றோராலும் வழங்கப்பட்டன. முன்னைநாள் தலைமைஆசிரியர் திரு. பே. இராயப்புஅவர்களும், பாரியாரும் உவந்தளித்த அன்பளிப்புப்பார்சல் அதேநேரம் வந்து சேர்ந்தமையும் சபையோர்க்குப் பெருவியப்பை உண்டுபண்ணியது. விழாவுக்குத் தலைமைதாங்கிய தலைமைஆசிரியர் திரு. சீ. இராசேந்திரம்அவர்கள் தமதுஉரையில், இந்தஆசிரியை மாணவர்களைத் தாயன்புடன்நேசித்து வேதஅறிவையும், உலககல்வியையும் அவர்களுக்குக் கொடுப்பதில் மிக்ககரிசனையுடன் காலத்தைச்செலவிட்டாரெனப் பாராட்டினார். மேலும், மாதாவின்மூலமாகவே நாம் ஈடேற்றம் அடையலாம் என்பதைப் பெற்றோர்க்கும், பிள்ளைகளுக்கும் பலமுறைகளில் எடுத்துக்காட்டி அதற்குதவியாக மரியாயின் சேனையைஆக்கி நலமாகநடத்திக் கிராமத்திலேயே ஓர்அழியாத ஞானவாஞ்சையை உண்டுபண்ணிவிட்டிருப்பது என்றும் மறக்கமுடியாததொன்றாகுமென எல்லோர்சார்பாகவும் நன்றிதெரிவித்தனர். ஈற்றில், பிரிவுஉபசாரநாயகி தனது நன்றியைத்தெரிவித்து நன்மதிஉரைத்தநிற்க, இனியசிற்றுண்டி உபசாரணையுடனும், புகைப்படநிகழ்ச்சியுடனும் விழா இனிதே நிறைவேறியது.

ச. மிக்கேல், மெலிஞ்சியார்

● பரிசுத்தபாப்பரசர் தமதுமாளிகையைப் பராமரிப்போராகத் தமது சொந்தம் பேர்காமோமேற்றிராசனத்திலிருந்து மூன்று கன்னியாஸ்திரிமாரைத் தருவித்திருக்கின்றார். இவர்கள் பேர்காமோவின் வறியகன்னியர்கள் சபையைச் சேர்ந்தவர்கள். அநாதைகளையும், வயோதிபர்களையும் பராமரிப்பதும், மற்றும்பிறர்சிநேகத் தொண்டுகளைச்செய்வதுமே இச்சபையாரின் கடமையாகும்.

● பிரித்தானியதேசத்திலே வருடந்தோறும் 55கோடிக்குமேற்பட்ட கிறிஸ்மஸ்காட்டுகள் விற்பனையாகின்றன. 1843-ம்ஆண்டு அங்கே அச்சிடப்பெற்ற முதல்கிறிஸ்மஸ்காட் ஜோண் கல்கொட்ஹோர்ஸ்லி என்னும் ஆங்கிலேயரால் நிர்மாணிக்கப்பெற்றது. அதில் ஆயிரம்காட்டுகளே அச்சிடப்பெற்று ஒன்று ஒருசிலின்வீதம் விற்கப்படலாயிற்று.

● போப்பிள்ளைகளைக் கண்டஓர் பாட்டனுரும், 1947-ம்ஆண்டுமுதல் தாரமிழந்திருந்தவரும், 54வயதுடைய வருமான ஒறிலே செக்குயின்அவர்கள் கனடாதேச ஒற்றுவாககரிலே அன்று திங்கட்கிழமை குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் முன்பு கனடாதேசவானொலிக் கோர்ப்பறேஷனின் தலைவராய்விளங்கியிருந்தார்.

### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்தேறியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், தெற்பச்சிதைவினால் ஏற்படும்நோய்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே எமது சேவையின் இலட்சியம்.






மூன்றும்வருட
மரண ஞாபகம்

**பிறப்பு: 28-4-30 இறப்பு: 19-1-56**

எங்கள் மனதைவிட்டு மறவாதஎங்கள் அருமைச் சிரேஷ்டபுதல்வி கமலம் லோறன்சியாப்பிள்ளை பெற்றோர், சகோதர சகோதரிகளையும், பந்துமித்திரர்களையும் கதிகலங்கச்செய்துவிட்டு இம்மண்ணுலக வாழ்வை நீத்து, விண்ணுலகவாழ்வெய்தின மூன்றும் வருடம் நிகழும் 19-1-59-ல் பூர்த்தியாகிறபடியால், இதைக்காண்னுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். கன்னியர்களே, இளசன்சிநேகிதர்களே கிறிஸ்தவகருணையுடன் இவளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள வினயமாக வேண்டுகின்றோம். அன்றையதினம் யாழ்ப்பாணம், அர்ச். யுவானியார்கோவிலில் திக்கப்பாடற்பூசையும், யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலும், நின்னவேலி, அர்ச். சவேரியார் கோவிலிலும், நெடுந்தீவு, அர்ச். சவேரியார்கோவிலிலும் இவளின் ஆன்மசாந்திக்காகத் திவ்வியபூசைகளும் நடக்கும்.

இவளையிழந்து பரதவிக்கும்

தந்தை: சி. தெ அமிர்தநாதர்.
தாய்: அ. பொன்னேரல்

சகோதரர் சகோதரிகள்:
அன்ரனி குணசேகரம்,
சேவியர் ஜெயசேகரம்.
யோசவின் சவுந்தரி, நீருா,
திரேசா அரியமலர்.

● 12-ம்பத்திநாத பாப்பானவாது மரணத்தின் ஞாபகார்த்தமாக ஆர்ஜென்ரீனாதேச அரசாங்கம் புதியதினமான 30லட்சம் தபால்முத்திரைகளை அச்சிட்டுப் பாவனைக்குவழங்கியிருக்கிறது.

● பாப்பரசர் ஜேர்மன்பாஷையைக் கற்றுக்கொள்ளத் தமக்குண்டான விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறாரென அறிவிக்கப்படுகிறது. அதற்குக் காரணம், ஆஸ்திரியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்துமுதலாம் நாடுகளிலிருந்து வரும் யாத்திரிகர்களுடன் அவர் நெருங்கியதொடர்பு கொண்டிருக்கக் கூடியதாயிருக்கச்செய்வதேயாகும்.

திரு. பிலிப் ஜேக்கப் அவர்களின்
1-ம்வருட மரணஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 7-8-26 | 15-1-58 |

இந்த விண்ணப்பத்தைக்காணுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். சந்நியாசிகளே, சங். கன்னியர்களே, விசுவாசிகளே திரு. பிலிப் ஜேக்கப்அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக இரக்கமுள்ளயேசுவிடம் மன்றாடும்படி தயவாகவேண்டுகிறோம்.

இவரைப்பிரிந்து துயருறும்

மனைவி: ஜே. யேசம்மா பெனடிக்ரா,
மைந்தர்: ஜே. அன்ரன் குலசேகரம்.
ஜே. யோசெவ் ஞானசேகரம்.
உறவினரும்.

மேற்குத்தெரு,
ஊர்காவற்றுறை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1760

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

நாவடி
சரவணமுத்து கர்தையா
— வழக்காளி.
எதிராக சுதுமலை
வைத்திலிங்கம் சிவரெத்தினம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1760-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1959-ம் ஆண்டு மாசிமாதம் 28-ந் திகதி (28-2-59) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிதொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,795-77-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்கு 22-7-57 தொடக்கம், 23-10-57 வரையும் 100-க்கு 8%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 205ரூபா 92சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்மேற்குப்பகுதி மானிப்பாய்க்கோயிற்பற்று, ஆனைக்கோட்டைஇறைநாகருதேவன் இடை ப. செ. இ. 10 ½. எல்லை: கிழக்கு — தம்பர் வேலுவின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு — குறித்த உரிமைக்காரருக்கும், வைத்திலிங்கம் பரமநாதனுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — என். ஆறுமுகம் சின்னையாபிள்ளையின் ஆதனம். தெற்கு — வேலுகனகரின் ஆதனம்.

முதபதிவு 167/155.

நா. செல்லையா,
Commissioner, Valuer and
Licensed Auctioneer.
கம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 12-1-59.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 15-1959.